விலை சதம் 25; தொலைபேசி 23411

சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, சித்திரை 26உ (9-5-71) ஞாயிறு ற. அவ்வல் பிறை 13 புத்தகம் 25 இதழ் 25

# துரையப்பா துள்ளாதே!

## 'குருட்டு அதிஷ்டம்' நெடுநாள் நில்லாது

யாழ்ப்பாணத்தின் புதிய மாநகரசபை மேயரான அல்பிரட் துரையப்பா பழையபடி கூத்தாடிக் குதிக்கத்தொடங்கியுள்ளாராம். இதுபற்றி யாழ்வாசி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், 'கொள்கை அடிப்படையிலோ— பொதுமக்களின் கருத்துக்கு ஏற்பவோ— யாழ்மாநகர சபையின் மேயராக துரையப்பா ஆகவில்லை என்றும், மாநகர சபையில் உள்ள உதிரிகள் சிலர் முட்டுக் கொடுத்து துரையப்பாவைத் தூக்கி விட்டிருக்கிறார்கள்' என்றும் கூறினர். 'இது ஒரு குருட்டு அதிஷ்டம்' என்று அந்த யாழ்வாசி சொன்னர். யாழ்வாசி தொடர்ந்து தெரிவித்த கருத்துக்கள் இவை:—

"அடிக்கடி குதிக்கவேண்டும் என்றும் அடிக்கடி குப்புற விழவேண்டும் என்றும் துரையப்பாவின் ஜாதகத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கலாம் போல் தெரிகிறது. பழைய காலத்தில் பொதுமக்கள் துரையப்பாவின் துட்டித்தனத்துக்கு என்ன வகையான பரிசுகளெல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை துரையப்பா ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டும்; தமிழினத்தின் ஒரே விடுதலை இயக்கமாம் தமிழரசுக்கட்சிக்கு எதிராக துரையப்பா என்னதான் தலைகீழாக நின்றாலும் வெற்றிபெறவே முடியாது; 'துரையப்பா நீ தமிழினத்துக்குச் செய்தது கொஞ்சத் துரோகமா அப்பா?' என்று முகத்துக்கு நேரே மக்கள் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள்."

### முஜிபுர் ரகுமானின் வீடு நினைவுச் சின்னமாகும்!

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிவதற்கு முன்பு இந்தியாவுக்குச் சொந்தமான பீகார் மாகாணத்தில் உள்ள பூர்ணியா என்னும் இடத்தில்தான் வங்காள தேச விடுதலைத் தலைவர் முஜிபுர்ரகுமான் வசித்து வந்தார். ஒன்பதாவது வகுப்புவரை அங்கு தான் படித்தார். அதன் பின்புதான் வங்காள தேசத்தில் குடியேறினார் முஜிபுர் ரகுமான்.

பூர்ணியாவில் உள்ள முஜிபுர் ரகுமான் வசித்த வீட்டை இந்தியாவின் தேசிய உடைமையாகவும் முஜிபுர் ரகுமானுக்கான நினைவுச் சின்னமாகவும் ஆக்குவதற்கு இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

## யாழ்ப்பாணம் மாநகரசபை சிங்களத்திலும் கருமம் ஆற்றும்!

'அரசாங்கத்துடன் யாழ் மாநகர சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமிழில் இருப்பதுடன் சிங்களத்திலும் மொழி பெயர்ப்பு இணைத்து அனுப்பவேண்டும்' என்று அல்பிரட் துரையப்பாவைப் புதிய மேயராகக் கொண்ட யாழ்ப்பாணம் மாநகர சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

தமிழினம் பிரமித்துப் போகும் அளவுக்கு இது மாதிரியான இன்னும் பல தீர்மானங்களை யாழ்ப்பாணம் மாநகர சபை விரைவில் அல்பிரட் துரையப்பா தலைமையில் நிறைவேற்ற இருப்பதாகவும் தெரியவருகிறது.

### போனவாரச் சுதந்திரனில் பொத்தல் ஏன்?

போன வாரச் சுதந்திரனில் (2- 5- 71) ஓர் இதழில் சில பகுதிகள் கத்தரித்து எடுக்கப்பட்டிருந்தன அல்லவா? அவசரகாலச் சட்டத்தின் கீழ் தணிக்கை அதிகாரிகள் நீக்கச் சொன்ன பகுதிகளையே நாங்கள் கத்தரித்து எடுத்தோம். தணிக்கைக்கு உட்பட்டே தற்போது சுதந்திரன் வெளிவருகிறது என்பதையும் அறியத் தருகிறோம்.

## சும்மா இரு!



"அறம் வேலை செய்யத் தொடங்கும்போது நீ சும்மா இரு; அறத்தின் முன்னே நீ சின்ன மனிதன். அறத்துக்கு உன்னுடைய துணை ஒன்றும் தேவையில்லை; அறம் கோடி மனிதரின் வல்லமைக்குநிகரானது. அது தனித்து வேலை செய்யும். நீ வேண்டுமானால் அறத்தின் வேலைத்திறனைப் பார்த்துக் கொண்டு இருக்கலாம். அறம் வேலை செய்யத் தொடங்கும்போது நீ சும்மா இரு!"

—அறிஞர் அண்ணா;

## ராஜராஜ சோழன் மீண்டும் பிறந்தான்

பழந்தமிழ் மன்னன் ராஜராஜசோழன் மீண்டும் இந்தியாவில் பிறந்துள்ளான். உடல் வலிமையுள்ள இந்த ராஜராஜ சோழன் ஆட்களைத் தூக்கிக் கொண்டு வானத்தில் பறப்பானும்.

என்ன ஆச்சரியப்படுகிறீர்களா? இந்திய அரசு விரைவில் பறக்கவிட இருக்கும் புதிய பயணிகள் விமானம் ஒன்றுக்கு 'ராஜராஜ சோழன்' என்று பெயர் சூட்டப்பட்டதையே குறிப்பிடுகிறோம். வேறொன்றுமில்லை.

ஏனைய இரு விமானங்களுக்கு ஷாஜகான் என்றும் அசோகன் என்றும் பெயர் சூடப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்களின் வேண்டுகோளின் பேரிலேயே ஒரு விமானத்துக்கு 'ராஜராஜ சோழன்' என்று பெயர் சூட்டப்பட்டதாம்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் பழந்தமிழர் பெருமையை மறவாத தமிழர்களில் ஒருவர். கண்ணகியின் சிலை சென்னையிலே அமையக காரணமாக இருந்தவர். சேரன் செங்குட்டுவனை வைத்து நாடகம் செய்தவர். இப்போது இந்திய விமானத்துக்கு ராஜராஜ சோழன் பெயரை வைத்து தனது பழைய தலைமுறையை மறவாத உளப்பாங்கை வெளிப்படுத்திவிட்டார்.

### கட்சி மாறும்

## பச்சோந்திகளை கண்டித்தார் பண்டிதர்

"கட்சி விட்டுக் கட்சிமாறும் பச்சோந்திகள் சிங்களவரிடையேயும் உண்டு. தமிழரிடையேயும் உண்டு. பச்சோந்திகள் யாராய் இருப்பினும் அவர்களை அணைத்து—தீனிபோட்டு— அவர்கள் தேவைகளைத் தீர்த்து—மகிழ்வதை அரசாங்கம் கைவிடவேண்டும். பச்சோந்திகளால் எந்த நாடும் முன்னேறாது" பாராளுமன்றத்தில் இவ்வாறு இடித்துக் கூறினார் பண்டிதர் இரத்தினம்.

அவர் பேசிய அரியணை உரையின் ஒரு பகுதி இது:-

மாண்புமிகு சபாநாயகரவர்களே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பிலுள்ள இரண்டு திருத்தங்களையும் நான் பிரேரிக்கின்றேன்.

முதலாவது திருத்தம்:

"எனினும், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கும் உயர் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்களைச் சேர்க்கும் விடயத்தில் தமிழ் மொழி மூலம் கல்விகற்ற மாணவர்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்படுவதை தங்கள் அரசாங்கம் உத்தரவாதம் செய்கிறதெனவும் உறுதிப்பாடு செய்கிறதெனவும் மேன்மைதங்கிய தங்களது உரையில் குறிப்பிடத் தவறியமையையிட்டும், குறிப்பாக, இலங்கையில் நிலவும் சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கம் மேன்மைதங்கிய தங்களது அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தங்களது உரையில் குறிப்பிடத்தவறியமையையிட்டும் வருந்துகிறோம்"

இரண்டாவது திருத்தம்:

எனினும், இலங்கை வாழ் மக்களை, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களை இப்போது எதிர்நோக்கியுள்ள பெருமளவிலான வேலையின்மைப் பிரச்சினையை ஒழிப்பதற்கு ஆக்கபூர்வமான பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தங்கள் அரசாங்கம் மேற்கொள்ளுமென



மேன்மை தங்கிய தங்களது உரையில் குறிப்பிடக் குறிப்பாகத் தவறியுள்ளதையிட்டு வருந்துகிறோம்.

தலைவரவர்களே, எனக்கு முன் பேசிய கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குறிப்பைச் சொன்னார். அதனை நான் அப்படியே ஆமோதிக்கிறேன். சென்ற அரசாங்கத்தில் எப்படி அலுவல்கள் நடந்தனவோ அப்படியேதான் இந்த அரசாங்கத்திலும் அலுவல்கள் நடைபெறுகின்றன. இதுதான் என்னுடைய அபிப்பிராயமும். சென்ற அரசாங்கம் ஆட்சி நடத்தியபொழுது பல அலுவல்கள் எப்படி மெல்ல மெல்ல இயங்கிக் கொண்டிருந்தனவோ அது போலத்தான் இப்பொழுது கடந்த பத்துமாத காலமாக இந்த அரசாங்கத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன.

சமதர்மத்தைப் பேசுகிற அரசாங்கம் பதவிக்கு வந்த

(4-ம் பக்கம் பார்க்க)

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே'

—குமரகுருபரர்-

காலம் பெறுமதியானது: காலத்தை வீணாக்காதீர்கள் மில்க் வைற் சலவைப்பவுடர் வாங்கிப் பாவித்து நேரத்தையும், பணத்தையும் மிச்சப் படுத்துங்கள்: பாவித்த உறைகளை அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கநாட்டு விடுதலை வரலாறு (2)

# "மேற்கு வாழ்கிறது கிழக்குத் தேய்கிறது"

வங்க நாட்டிலே இப்போது இசைக்கப்படும் விடுதலை கீதத்திற்கு கலாச்சாரக் காரணங்கள் இசையமைத்துக் கொடுத்தது என்றால் பொருளாதாரக் காரணங்கள் பாடல் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்று கூறலாம்.

கிழக்குப் பகுதி—மேற்குப் பகுதி என்ற இருவேறு பூக்கள் பாகிஸ்தான் என்ற ஒரே செடியில் மலர்கிற அமைப்பு இயற்கையிலேயே பிரிவினை விதையில் அமைந்து விட்டது!

1200—மைல்களுக்கு அப்பால் இருக்கிற இருவேறு பகுதிகளிலும் வெவ்வேறு விதமான பொருளாதாரச் சூழ்நிலைகள் துவக்கக் காலத்திலிருந்தே நிலவின.

நிலப்பரப்பிலே மேற்கு பாகிஸ்தான் பெரியது என்றாலும் மக்கட்தொகை அங்கு கிழக்கு பாகிஸ்தானை விடக் குறைவு.

நிலப்பரப்பிலே பெரிதான மேற்கு பாகிஸ்தானில் ஐந்து கோடியே எண்பது லட்சம் பேர் வாழ்கின்றனர்.

நிலப்பரப்பிலே சிறிதான கிழக்கு பாகிஸ்தானில் ஏழு கோடியே இருபது லட்சம் பேர் வாழ்கின்றனர். அதாவது ஒரு சதுர மைல் பரப்பளவில் ஆயிரத்து நானூறு பேர் வாழ்கின்றனர்.

வங்க நாடு தனி நாடு ஆனால் மக்கட்தொகையைப் பொறுத்தவரையில் அது உலகத்தின் எட்டாவது பெரிய நாடாக இருக்கும்!

அதுபோலவே அது உலகிலேயே மிகுந்த ஜன நெருக்கம் உடைய நாடுகளில் ஒன்றாகவும் இருக்கும்!

ஆனால் அதே நேரம் கிழக்கு பாகிஸ்தான் வறுமையில் உழன்று கொண்டிருக்கிறது!

முஜிபுர் ரகுமான் வங்க நாட்டு விடுதலைக்காக எழுப்பிய முழக்கங்களில் தனிச்சிறப்புவாய்ந்தது 'மேற்கு வாழ்கிறது! கிழக்கு தேய்கிறது'—என்பதாகும்!

மேற்கு பாகிஸ்தானின் தனிநபர் வருமானம் கிழக்கு பாகிஸ்தானை விட எப்போதும் அதிகமாகவே இருந்திருக்கிறது.

மேற்கின் பொருளாதார வளர்ச்சி சுமார் ஏழு சதவிகிதமாக இருந்திருக்கிறது.

ஆனால் கிழக்கின் பொருளாதார வளர்ச்சி சுமார் மூன்று சதவிகிதம் தான்!

தீட்டப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும் மேற்கிற்கும் கிழக்கிற்கும் உள்ள பேதங்களைப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அதிகமாக்கினவே தவிர; ஒரு சிறிதும் குறைத்திடவில்லை!

உதாரணமாக 1964-லிருந்து 1969-வரை உள்ள ஐந்து ஆண்டுகளில் மேற்கிற்கும் கிழக்கிற்கும் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வு நாற்பது சதவிகிதத்திலிருந்து அறுபது சதவீதமாக உயர்ந்தது.

எனவே மூன்றாவது திட்டத்தில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் உள்ள இந்த பேதத்தைச் சுமார் இருபது சதவிகிதமாவது குறைத்திட வேண்டும் என்று ஒரு இலக்கை விதித்துக் கொண்டனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால், திட்டம் நிறைவேற்றப் படுகிற நேரத்தில் பொருளாதார பேதம் இருபது சதவிகிதம் குறைக்கப் படுவதற்குப் பதிலாக சுமார் முப்பது சதவிகிதத்திற்கும் மேலாக அதிகரித்து விட்டது.

மேற்கு மேலும் வளர்ந்தது; கிழக்கு மேலும் தேய்ந்தது!

மத்திய அரசாங்கம் துவங்கிய தொழிற்சாலைகள் அனைத்தும் மேற்கின் வளர்ச்சியையே அடிப்படையாக வைத்துத் துவக்கப்பட்டன!

1948-லிருந்து 1951-வரை சுமார் நூற்றுப்பதின்மூன்று கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டது.

இதில் கிழக்குப் பகுதிக்குக் கிடைத்தது சுமார் இருபத்தி இரண்டு சதவிகிதம்தான்!

1955-ம் ஆண்டு வரை மத்திய அரசாங்கத்திடமிருந்து கிழக்குப் பகுதிக்குக் கிடைத்தது சுமார் நூற்று இருபத்தி ஆறுகோடி ரூபாய்!

ஆனால் மேற்குப் பகுதிக்குக் கிடைத்ததோ சுமார் ஆயிரம் கோடி ரூபாய்!

1949-50-ல் மேற்கின் தனிநபர் வருமானம் கிழக்கை விட சுமார் பதினெட்டு சதவிகிதம் அதிகம்!

1969-70-ல் அது சுமார் முப்பத்தி எட்டு சதவிகிதம் அதிகமாகி விட்டது!

—இதன் விளைவாக கிழக்கு பாகிஸ்தானில் மூன்றுபேரில் ஒருவர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் பாதிக்கப்பட்டவராக இருக்கிறார்!

கிழக்கு பாகிஸ்தானின் பொருளாதார வளம் மேற்கு பாகிஸ்தானின் வளர்

'முரசொலி' மாறன்
எம். ஏ. எம். பி.

ச்சியாகவும் மேம்பாட்டிற்காகவும் சுரண்டப்படுகிற சூழ்நிலை உருவாயிற்று.

பாகிஸ்தானின் பொருளாதாரத்தை இருபது பெரிய முதலாளிக் குடும்பங்கள் ஆட்டிப்படைக்கின்றன.

அந்த இருபது பெரிய முதலாளிக் குடும்பங்களில் எவரும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கிடையாது!

கிழக்குப் பகுதி உலகிலேயே அதிகமாகச் சணல் விளையும் பகுதிகளுள் ஒன்றாகும்!

இந்த சணலை ஏற்றுமதி செய்வதால் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி மேற்குப் பகுதியின் ஏற்றத்திற்காகப் பயன் படுத்தப்பட்டது!

சணல் விளைவிப்பவர்கள் கிழக்கு பாகிஸ்தானில் வாழும் வங்க மொழி பேசுகின்ற வங்காளிகள்! சணல் விளைவிக்கப்படுவது கிழக்குப் பாகிஸ்தான் மண்ணில்! ஆனால் இதன் காரணமாக வளம் பெற்றது மேற்கு பாகிஸ்தான்! இந்த வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் மேற்கு பாகிஸ்தான் வியாபாரிகள், முதலாளிகள்!

கிழக்குப் பகுதியில் ஏதாவது பெரிய தொழிற்சாலைகள்—வியாபார நிறுவனங்கள் இருக்குமானால் அதில் தொழிலாளிகளாக இடுப்பொடியப்பாடுபடுகிறவர்கள் வங்காளிகள். அவற்றின் உரிமையாளர்கள் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள்!

—இப்படி மேற்கைச்சேர்ந்தவர்கள் பாகிஸ்தானின் மாசிவாரிகளாக இருக்கிறார்கள்!

தொழில் — வியாபாரம் நடத்துவதில் மட்டும் மேற்கு மேம்பட்டு நிற்கவில்லை! அரசாங்க உயர் உத்தியோகஸ்தர்களில் கூட மேற்குபாகிஸ்தானியர் ஆதிக்கம்தான் அதிகமாக இருந்தது!

பெரிய பெரிய நிர்வாக அதிகாரிகள் அனைவரும் அவர்கள்!

இராணுவத்திலே பெரிய உத்தியோகங்கள் அனைத்தும் அவர்களுக்கே!

இப்படி 'அவர்கள்', 'இவர்கள்' என்கிற பாகுபாடு உருவாகி இறுகியது!

'மேற்கு வாழ்கிறது; கிழக்கு தேய்கிறது' என்கிற முழக்கத்திற்கு முஜிபூர் ரகுமான் இவ்வாறு தெளிவாகப் புள்ளிவிவரங்களோடு விளக்கினார்!

"ஐந்து கோடியே எண்பது லட்சம் மக்கட் தொகையுடைய மேற்கு பாகிஸ்தான் எழுபது சதவிகித வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்திக் கொள்கிறது; இறக்குமதி செய்யப்படுகிற பொருள்களின் மதிப்பில் எழுபதுசதவிகிதத்தை எடுத்துக் கொள்கிறது! மத்திய அரசாங்க உத்தியோகங்களில் நூற்றுக்கு எண்பத்தி ஐந்து பேர் மேற்குப் பாகிஸ்தானிகளாக இருக்கின்றனர்! இராணுவத்தில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் மேற்குப் பாகிஸ்தானிகளாக இருக்கின்றனர்!"

—இவ்வாறு பாகிஸ்தானின் ஆளும் வர்க்கமும், முதலாளிவர்க்கமும் கிழக்கு பாகிஸ்தானை ஒரு சுரண்டும் பகுதியாக — காலனியாக மாற்றி விட்டனர்!

வளமும், வாழ்வும் மேற்கில்!

வறுமையும், வாட்டமும் கிழக்கில்!

தேய்ந்துபோனவன் விழித்துக் கொண்டான்!

சுரண்டப்படுகிறவன் அதன் காரணங்களை உணர்ந்து கொண்டான்!

—இதன் விளைவுதான் இன்று வங்கநாட்டிலே எழுந்திருக்கிற விடுதலைச் சிங்கநாதமாகும்!

ஒரு சமுதாயத்தில் சீரான பொருளாதார வளர்ச்சி இல்லாவிட்டால் அதன் பயங்கர விளைவு என்ன ஆகும் என்பதற்கு பாகிஸ்தான் ஒரு உதாரணமாகும்!

# திருக்குறள்-ஓர் உலகப் பேரிலக்கியம்

உலக இலக்கியச்செல்வத்துக்குத் தமிழர்களும் தமது பங்கினை ஆற்றியுள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த மயிலாப்பூரில் தாழ்த்தப்பட்ட குலத்திற் பிறந்த திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் ஆகியவை பற்றி இயற்றியுள்ள மாபெரும் அமர இலக்கியமான திருக்குறள் இதற்கு ஒரு சான்றாகும்.

## வட மொழியோடு போட்டியிடும் தமிழ்

தமிழ் நாட்டு நாடோடிக் கதைகள், பழமொழிகள் முதுரைகள் மற்றும் மொழியியல், சரித்திர, தத்துவார்த்த நூல்கள் பலவும் ரஷ்ய மொழியில் முன்னமேயே மொழி பெயர்க்கப்பட்டுள்ளன—

ஆயினும் 1963ல் தான் திருக்குறள் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இதனை அ. கிருஷ்ணமூர்த்தியின் ஒத்துழைப்போடு யூரிகிளாசோவ் மொழி பெயர்த்திருந்தார். இம் மொழி பெயர்ப்பு வந்த பின்னர்தான் நாங்கள் தமிழ் இலக்கியத்தைப் பற்றிய கருத்தை உண்மையில் பெற்றோம் எனலாம். அந்நூலின் தொன்மை, தத்துவார்த்தச் செறிவு, ஞான விசாலம் மற்றும் வடமொழியோடு போட்டியிட்டு நிற்கக்கூடிய செந்தமிழின் அழகு ஆகியவற்றை உணர்ந்தோம்.

## தமிழ் ரசிகர் எண்ணிக்கை கூடுகிறது!

இன்று தமிழ் இலக்கியத்தை ரசிக்கும் சோவியத் ரசிகர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. அரிய பெரும் தமிழ் இலக்கியச் செல்வமான திருக்குறளின் புதிய மொழிபெயர்ப்பை, பிரபல தமிழ் இலக்கிய மொழி பெயர்ப்பாளரான ஏ. இப்ரஹிமோவ் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்துள்ளார்.

புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கல்கி மற்றும் பல தமிழ் எழுத்தாளர்களின் நூல்களையும் இவரே ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார். இவரது தற்போதைய திருக்குறள் மொழி பெயர்ப்பு குறட்பாவின் எழிலை ஆழ்ந்து புரிந்து கொள்வதற்கும் திருவள்ளுவரது அரிய குறட்பாக்களின் ஞான விசாலத்தையெல்லாம் இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கும் எங்களுக்கு உதவும்.

## திருக்குறள் உலக இலக்கியம்!

தமிழகத்திலும் தென்னிந்தியாவிலும் திருக்குறள் மிகவும் பிரபலமான நூல் என்பதை நாங்கள் நன்கறிவோம்.

இருபது மொழிகளுக்கு மேல் மொழி பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் பொதுவான உலக இலக்கியச் செல்வத்தில் ஒன்றாகிவிட்டது; உலகின் பற்பல நாடுகளிலும் மிகுந்த பிரபலமும் பிரசித்தியும் பெற்றுவருகிறது.

## தத்துவக் கவிஞர்

திருக்குறளை தமிழ்மறை என்று குறிப்பிடுவதிலும் அர்த்தமுண்டு. இந்நூல் தனது காலத்திய சமுகவாழ்வின் சகல அம்சங்களையும், மானிட வாழ்வின் மதிப்பு, லட்சியங்கள் அனைத்தையும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றது. திருவள்ளுவர் தமது சமயக் கருத்துக்களிலும் தத்துவ நோக்கிலும், அறநெறிக் கோட்பாடுகளிலும் உண்மையான ஞானியாகவும் மாபெரும் மனிதாபிமானியாகவும் திகழ்கிறார்.

அவர் சகல மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய, தனி நபருக்கும், சமூகத்துக்கும் ஏற்புடைத்தான சர்வஜன சமய அடிப்படைகளையும் ஒழுக்க நெறிகளையும் வகுத்துரைக்க முயன்றுள்ளார்.

இந்த தத்துவார்த்தக் கவிஞர் ஒழுக்கநெறி, சமயம், சமுதாயம், அரசாங்கம், காதல், குடும்ப வாழ்க்கை ஆகிய அனைத்தையும் பற்றிய தமது சொந்த, தனிச்சிறப்பு மிக்க கருத்துக்களை வழங்கியுள்ளார்.

(9-ம் பக்கம் பார்க்க)

வி. மகரெங்கோ
துணைப் பேராசிரியர், கீழை மொழிகள் கல்லூரி
மாஸ்கோ பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் நறுக்கு

அன்பின் கோவை அண்ணுவுக்கு:-

பல்லாயிரக் கணக்கான சுதந்திரன் வாசகர்களில் நானும் ஒரு சுதந்திரன் பிரியன். ஈழத் தமிழினத்தின் இணையற்ற ஒரே குரலாம் சுதந்திரனின் ஆசிரியர் என்றளவில் மட்டுமே என் மதிப்பைப் பெற்றிருந்த தாங்கள், அண்மையில் சிறைசென்று வந்ததிற்கு பிறகு உணர்ச்சியுள்ள உத்தம தமிழன் என்பதையும் என்னிடமிருந்து தட்டிப் பறித்து விட்டீர்களே! வாழ்த்துகிறேன்.

நீங்கள் எழுதி முடித்து விட்ட நான் ஏன் கைதியானேன் என்ற கட்டுரையை நானும் படித்து முடித்து விட்டேன். தூங்கிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தை உங்களைப்போன்றவர்கள் தட்டியெழுப்பிவரும் போது எங்களைப் போன்றவர்கள் உங்கள் பின்னுல்வர தயாராக இருக்கிறேம். நீங்களும் உங்கள் பணியும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறேன். வாழ்த்துகிறேன்.

மாணவர் படை வாழ்க! சுதந்திரன் வளரட்டும்!! உங்கள்பணி வாழ்க!!!

—சி. க. யோகநாதன்,
(வண்ணையூர் கலைஞன்.)

ஃ

மதிப்பிற்குரிய கோவை அண்ணு!

ஒரே பாசறையில் உருவாகி ஒரே இலட்சியத்தை நோக்கிச் செல்லுகின்ற ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றுகின்ற எண்ணங்களுக்கும் கருத்துக்களுக்கும் தாங்கள் உருவகம் கொடுத்து உணர்ச்சி யூட்டுவது கண்டு பேருவகை கொள்கிறேன்.

"சுதந்திரன்" ஒவ்வொரு தமிழ் மகனையும் மகளையும் உரிமைக்குக் குரல் எழுப்பக் கூடிய முறையில் தயார் செய்கிறது. இதற்குத் தங்கள் கருத்துக்களும், பொய்க் கலப்பற்ற செய்திகளும், அரசியல் மடலும் சான்று பகரும்.

சென்ற சில நாட்களாக என் எண்ணத்தில் சுழன்ற சில கருத்துக்கள் 24-4-71 சுதந்திரன் இதழில் 'எண்ணம்' பகுதியில் மூதுரைகளாக வெளிவந்துள்ளது. இது ஒவ்வொரு தமிழ் மகன் உள்ளத்திலும் தர்மம், சத்தியம் என்பவற்றின் வலிமையையும் அதற்கு நம் முன்னேர் கொடுத்த மதிப்பையும் வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. உரிய சந்தர்ப்பத்தில் ஏற்ற கருத்துக்களை வெளியிட்டு ஒவ்வொரு தமிழ் மகனையும், சிந்திக்கத் தூண்டும் தங்கள் பணி தொடரட்டும்.

—இ. கனகசுந்தரம்,
தென்புலோலியூர்.

ஃ

குரலுக்கெட்டாத தூரத்திலும், கண்ணுக்கெட்டாத தொலையிலும் எங்கெங்கெல்லாமோ பரவிக் கிடக்கும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அபாய நிலைமைகளை அவ்வப்போது விபரித்து விளக்க வாய்ப்பான ஒரே ஒரு வழிதான் பத்திரிகை.

அப்பத்திரிகையின் பெயர் தான் எந்த அதிகாரக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல், அஞ்சாமல் ஓடாமல் ஒதுங்காமல் நக்கீரன் வீரம் போல் உள்ளதை உள்ளபடி ஊட்டி, வழி காட்டி வரும் சுதந்திரன் என்பதை யாவரும் அறிவர்.

அதன் ஆசிரியர் தீட்டிய 'நான் கைதியானது ஏன்' என்ற தொடர் கட்டுரையைப் படித்தால் நாம் மறந்துபோன வீரப்புயல்கள் நம் நினைவில் விளையாடும்.

அழித்துவிட வெட்டும் மரம் துளிர்த்து முளைப்பதென்றுல் அதற்கும் ஓர் முக்கிய காரணமிருக்க வேண்டும்; அதுபோல அரசாங்கமென்றும் பெரும்பான்மையென்றும், கோடரிக் காம்புகளென்றும் அடிக்கடி தமிழினத்தை அழிக்க முற்பட்டாலும் வல்லுயிர் போல் துளிர்த்தெழச் செய்து கொண்டிருப்பது சுதந்திரனே.

சுதந்திரன் வெளிவந்த காலந்தொட்டு வருத்தமாயிருந்தாலும் வாசிக்க முடியா விட்டாலும் ஒவ்வொர் வாரமும் அதை வாங்கி அதன் வடிவத்தை—அதன் தலையங்கத்தை அதன் நிறத்தைப் பார்க்கா விட்டால் பத்தியனே இல்லாத பக்தர்கள்; பத்தா?—நூறு? பல்லாயிரமுண்டு.

அரும் பெரும் சேவைக்கு அயராது உழைத்து வரும் சுதந்திரனுக்கு விலை 25 சதமாம்.

தமிழ்த் தியாகிகளின் தளராத சேவைக்கு வாரத்துக் கோர்முறை பிறந்து பறந்து வரும் சுதந்திரன் குஞ்சுக்கு ஒரு இருபத்தைந்தா இன்னும் எத்தனை இருபத்தைந்து சதங்கள் கொடுக்க வேண்டுமானுலும் கொடுக்கப் பின்னிற்கமாட்டாத செந்தமிழ்ச் செல்வங்கள் பல்லாயிரமுண்டு.

—எம். டி. ஆர்.,
மன்ஞர்.

ஃ

சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு:—

சுதந்திர ஈழத் தமிழ் நாட்டுக்கு அடுத்தபடியாக இணைப்பாட்சி மூலமே தமிழினம் தன்னுட்சி புரிய முடியும். சமஷ்டிக் கோரிக்கையைச் சிங்கள ஏகாதிபத்தியம் நிராகரித்த காரணத்தால் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிக்கவேண்டும். தொடர்ந்தும் அவர்கள் அ. நி. சபையில் பங்குபற்றினுல் தமிழ் மக்களின் ஆதரவோடுதான் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் தயாரிக்கப்படுவதாக வெளிநாடுகளில் தப்பபிப்பிராயம் நிலவக்கூடும். அதுமட்டுமின்றி தமிழ்துரோகிகளான ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் சேர்ந்திருப்பதினுல் தமிழ் மக்களின் ஆதரவு ஐக்கிய முன்னணி அரசுக்கு கிடைத்திருப்பதாக பிறர் நினைக்கக் கூடும்.

போராட்டம் போராட்டம் என மிரட்டுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் எதிர்ப்பியக்கம் (Resistance movement) சீர்குலைந்த நிலையில் இருப்பதை யாரும் மூடிமறைக்க முடியாது. இந் நிலையில் சட்ட மறுப்புப் போராட்டம் தற்போது சாத்தியம் இல்லாவிட்டாலும் எதிர்ப்பியக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் வரை அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து அரசாங்கத்தோடு ஒத்துழையாமல் இருப்பது மூலம் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் விடுதலை உணர்ச்சியையும் காண்பிக்க முடியும். தமிழரசுக் கட்சி பா. ம. உறுப்பினர்கள் அ. நி. சபையிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும். மேலும் வல்லமை ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு இதுவொரு சிறந்த வழியாகவிருக்கும்.

—மு. மாணிக்கம்,
[illegible]ப்பு.



## கேட்டுப் பாருங்கள்



தமிழ்ச் செல்வி,
அளவெட்டி.

கே: எம். ஜி. சுப்பிரமணியத்துக்கு கதிரவேற்பிள்ளை தன்னுடன் போட்டியிட வருமாறு சவால் விட்டது போல் அரசாங்கத்துடன் நான்காவதாக சேர்ந்துள்ள எட்டப்பர் கூட்டத்துக்கும் சவால் விடும் துணிவு வருமா?

ப: வால்பிடிக்க அவர்கள் தெரிந்து வைத்திருக்கும் போது (ச)வால் விடுவதில் எல்லாம் ஈடுபட்டு வீணை தொல்லைக்குள் ஏன் மாட்டப்போகிறுர்கள்.

ஃ

வே. மனேகரன்
திருநெல்வேலி தெற்கு

கே: மும்மூர்த்திகள் தமிழுக்காக போராடி வருகிறுர்களாம். உண்மைதானு?

ப: உண்மைதான்! தமது துரோகத்தை மூடி மறைக்க தமிழ் கிடைக்காமல் போராடுகிறுர்களாம்!

கே: நமது தந்தை செல்வா இலங்கைப் பிரதமராக இருந்தால்...?

ப: சிங்களமக்களின் உரிமைகளைப் பறித்திருக்கமாட்டார்.

ஃ

சோ. செல்வராசா
திருநெல்வேலி

கே: குமாரசூரியர், பல்கலைக்கழகம் பற்றி இப்பொழுது மௌனம் சாதிப்பது ஏன்?

ப: பல்கலைக்கழகம் சம்பந்தமாக அவர் அடித்து வந்த பல்டி அண்மையில் நாடாளுமன்றத்தில் கல்வியமைச்சரால் உடைக்கப் பட்டுவிட்டதால்!

ஃ

தமிழ்ச்செல்வி மு.
சாவகச்சேரி.

கே: செய்யும் செயல்களினை தமிழில் செய்யும்படி எனது நண்பிகட்குக் கூற அவர்கள் பின் வாங்குகிறுர்களே. இவர்கட்கு என்ன செய்யலாம். தமிழில் கடிதத்திற்கு முகவரியிட கூச்சமாயிருக்கிறதாம். மற்றும் தமிழில் ஏனைய காரியங்களைச் செய்யவும் கூச்சமாக இருக்கிறதாம், இப்படிப் பட்டவர்கட்கு என்ன கூறுவது?

ப: தமிழர் பண்பிற்கும், கலாசாரத்திற்கும் மாருக நடந்துகொள்ள கூச்சப்படாது முன்னிற்கும் பெண்களுக்கு கன்னித் தமிழின் பெருமை எங்கே புரியப் போகிறது!

ஃ

பி. சி. சேகர்,
ஆரையம்பதி, 3ம் குறிச்சி.

கே: ஏறக்குறைய 15, 20 வருடங்களாகப் பாடுபட்டுக் கொண்டு இருக்கும் உரிமையை 3 வருடத்தில் பெற்றுத் தருவதாக தம்பட்டம் அடிக்கும் த. கா. எம். பி. களை நம்பும் தமிழர்களின் நிலை என்னவாகும்?

ப: இலவுகாத்த கிளிக்கு ஏற்பட்ட நிலையே தவிர உருப்படியாக ஒன்றும் இவர்களால் ஆகாது!

ஃ

ட. வீரசிங்கம்
வத்தளை.

கே: உதைபட்டும் தமிழ் துரோகிகள் மூவர் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்து விட்டார்களே!

ப: உதைக்கும் காலை முத்தமிடுவதுதான் அவர்கள் இரத்தத்தில் ஊறிய பண்பு ஆச்சே!

## தமிழ் தோற்றம் பற்றிய ஒரு கருத்து

க. கணேசு பி. ஏ.

தமிழ் தோற்றம் பற்றிப் பலரும் பல மாதிரி அபிப்பிராயங்களை கூறிவந்த பொழுதிலும் அனேகமாக மேல்நாட்டு அறிஞர்களும் பலரும் தமிழ் திராவிடத்தில் இருந்து உருமாறி வந்தது என்று கூறுவார்கள். அவர்கள் கூறுவதற்குக் காட்டும் ஆதாரங்களாவது வடமொழி நூல்களிலும் வேறு மொழி நூல்களிலும் தமிழினைத் திராவிடம் என்று குறித்திருக்கின்றனர் என்றும், அத்திராவிடம் என்ற சொல்தான் காலகதியில் உருமாறித் தமிழாகி இருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர்.

வட மொழியிலும் சில இடங்களில் "ள" என்ற எழுத்தும் "ட" என்ற எழுத்தும் ஒன்றுக்குப் பதில் ஒன்று வரும். இதனுல் திராவிடம் என்பது த்ராவிளம் என்று மாறி இருந்து பின் "வ" என்பது சில இடங்களில் "ம" ஆக மாறுவதுண்டு. என்பதற்கிணங்க த்ராவிளம் என்பது த்ராமிளம் ஆகி பின் த்ரமிளம் ஆகிக் கடைசியாகத் தமிழ் ஆகியது என்பார்கள். அதாவது அதன் மாற்றம் த்ராவிடம்— த்ராவிளம் — த்ராமிளம் — த்ரமிளம் — தமிழ் என்றனர்.

இப்படி ஆராய்ந்து தமிழ் தோன்றியதனைக் காட்டிய பொழுதிலும் இதற்குப் போதிய ஆதாரங்கள் காட்ட முடியாதிருக்கின்றது. சங்க காலத்தில் இருந்து சங்கமருவிய காலம் ஏற்பட்டது என்பதனை இலக்கிய ஆதாரங்களுடன் எப்படி மருவியது என்று நிருபிக்கக்கூடியதாக இருக்கின்றதோ? அது போன்று திராவிடம் எப்படித் தமிழாக மாறியது என்பதற்குப் போதிய சான்றுகள் அமைந்த ஆதாரம் கிடையாது.

நமக்குப் பழமையான இலக்கண நூலாகக் கிடைக்கப்பட்டுள்ள தொல்காப்பியத்திலோ அல்லது இலக்கியங்களிலோ தமிழ் என்று குறிக்கப்பட்டிருக்கின்றன

(9-ம் பக்கம் பார்க்க)

## ஐயோ தமிழ்ப் பெண்காள்!

ஆண்டு பல காதலித்து
அன்னை தந்தை ஊரவர்க்கு
நீண்ட துயரளிக்க
நெஞ்சம் நிறைந்தவர்க்கு
தீண்ட இடமளித்து
தெருவில் பிணமாக
மாண்டு கிடந்த பல
மங்கையரின் கதையறிந்தும்
நீண்ட விழியசைத்து
நிமிர்ந்த தனம் காட்டி
வேண்டாத சிரிப்புதிர்க்க
வேண்டுமா நீங்களினும்?

"உன்னைத்தான் நானறிவேன்
உலகத்தில் வேறெருத்தி
என்நெஞ்சில் இல்லையடி"
என்றின்பக் கதைபேசி
பெண்ணவளை ஏமாற்றி
பிள்ளைக்குத் தாயாக்கி
கண்காணுத் தொலைவினிலே
கணவன் மறைந்தவுடன்
கண்ணீர் விடும் பெண்கள்
கதையைப் படித்தாலும்
கண்காட்டிக் கோடேறும்
கன்னியர்கள் குறையவில்லை!

ஐயோ தமிழ்ப் பெண்காள்
அலங்கோலம் உங்களது
கை, கால்கள், இடை மற்றும்
கழுத்து முகமெல்லாம்
பொய்யில்லை உங்களது
போக்குப் பிடிக்கவில்லை!
வையமிது தாங்காது!
வனிதைகளே உங்களையான்
கையெடுத்துக் கும்பிடுவேன்
கண்காட்டி மாய்மாலப்
பொய்ச் சிரிப்புச் சிரிக்காதீர்!
பண்போடு வாழ்ந்து போங்கள்!

— செ. குணரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## புத்த பகவானே!

அன்பே உலகில் மிக உயர்ந்த மதம் என்று அறம் போதித்த புத்தபகவானே! உன்னைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் இலங்கையில் இரத்த வெள்ளம் பாய்கிறதே—இதுதான் பௌத்த தர்மமா?

துப்பாக்கிகளை எல்லோருமே தூக்கிப்பிடித்துக்கொண்டு கூத்தாடுகிறார்கள்.

புத்தபகவானே! நீ அணிந்த காவி உடை இருக்கிறதே—அது எவ்வளவு புனிதமானது தெரியுமா? ஆனால் இலங்கையில் இன்று நடந்துகொண்டிருக்கும் இரத்த வேட்டையில் உன்னுடைய காவி உடை அணிந்தே போராடுகிறார்களாம்—ஆட்சியாளரே தரும் அதி பயங்கரச் செய்தி இது.

புத்தமதம் தேசியமதமாக ஈழத்தின் புதிய குடியரசில் இருக்கவேண்டும் என்று அரசியல் நிர்ணயசபை தீர்மானம் கொணர்ந்து நிறைவேற்றிய அடுத்த நாளே நாட்டில் இரத்தம் பொழிய ஆரம்பித்துவிட்டது.

எந்தப் புத்தன் அன்புக்காக அவதாரம் எடுத்தானே—அவனுடைய பெயர் பலமாக உச்சரிக்கப்படும் ஒரு நாட்டிலேயே கொலைகள் நிகழ்ந்து பிணங்கள் புரள்கின்றன.

புத்தபகவானே! இந்த வேளையில் உன் புனித அடிகளில் நாங்கள் இதயபூர்வமாக ஓர் உண்மையைக் காணிக்கை ஆக்குகிறோம்.

தமிழரசுக் கட்சி ஒன்றுதான் நீ போதித்த அன்பு வழியிலே ஈழத்தில் நடைபோடும் தர்மப்படை என்பதே அந்த உண்மையாகும்.

விசாகத் திருநாளாம் முழு வெண்ணிலா நாளில் ஊரெல்லாம் 'வெசாக்' பண்டிகை கொண்டாடுவார்களே—புத்தபகவானே! ஈழம் வாழ் தமிழர்கள் இந்து—கிருத்தவ—இஸ்லாமிய மதங்களை மட்டுமே சேர்ந்தவர்கள் எனினும் விசாகத் திருநாளைக் கொண்டாட எல்லா வகையிலும் அருகதையுள்ளவர்கள் அவர்களே!

அறத்துக்கு மதிப்பளிக்கும் தமிழ்க்குலமும்— தமிழ்க் குலத்துக்கு வழிகாட்டும் தமிழரசுக் கட்சியும் உனது திருநாமத்தை உச்சரிக்கவும்—உனது விழாவைக் கொண்டாடவும் போதியளவு தகுதிபெற்றிருக்கின்றன.

எங்களுக்கு என தனித்தனி இந்து—இஸ்லாமிய— கிருத்தவ—மதங்கள் உண்டெனினும் இந்த ஆண்டு நீ போதித்த அன்பையும் அறத்தையும் நினைந்து தமிழர்களாகிய நாங்கள் உனக்காக விளக்குகளை ஏற்றுகிறோம்!

உன் நிறைவான தாமரை ஒளிமுகத்தை நினைந்து ஒரு நிமிடம் மௌனத்தில் பிரார்த்திக்கிறோம்!

புத்தபகவானே! இந்த நாட்டில் அறமானது எல்லா வகையிலும் வாழ்வுபெற அருள்செய்!

எல்லா அநீதிகளும் மறைய — எல்லாக் கொடுமைகளும் தொலைய—எல்லா அறங்களும் நிலைபெற—புத்த பகவானே! உன் அருள் பொழிவதாக!

# கருணாநிதி இலங்கை வந்தார்....

**(இது ஒரு கற்பனைக் கட்டுரை. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஈழம்வந்தால் என்ன நடக்கும் என்ற கற்பனையில் நகைச் சுவையாக எழுதப்பட்டது!)**


இலங்கையின் தலைநகரான கொழும்பில் எந்த மூலையிலும் இதுதான் கதை. இன்று தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இலங்கை வருகிறார். ஆம்... ஈழத்தின் பிரபல விமான நிலையமான பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளம்போல் தமிழர் கூட்டம். அந்தக் கூட்டத்தில்தான் எத்தனை உணர்ச்சி!

அதோ......எல்லோரும் வானத்தைப் பார்க்கிறார்கள்—ஆம் கலைஞர் அவர்களைத் தாங்கிவரும் விமானமே அது. கம்பீரமாகக் கலைஞர் அவர்களைப்போலவே பறந்து வருகிறது. கூட்டத்திலிருந்தவர்கள் வானத்தை நோக்கியபடியே 'அண்ணா வாழ்க! 'கலைஞர் வாழ்க!' என்று ஆர்ப்பரித்து கரகோஷமிடுகின்றார்கள். விமானம் தரையிலே இறங்கி நிற்கிறது—ஏணியை விமானத்தோடு இணைக்கும் முயற்சிகளெல்லாம் முடிந்து—அந்த இன்பமான நிமிடம்!

ஆம். கலைஞர் கருணாநிதி அவர்களேதான்— அண்ணாவின் ஆருயிர்த் தம்பி—ஆறு கோடி உலகத் தமிழரின் நம்பிக்கைத் தெய்வம்-தமிழகத்தின் தனிப்பெரும் தலைவர்—இறங்கி வருகிறார்!

இந்த நிமிடம் விமான நிலையத்தில்—முன் வரிசையிலே மாலைகளோடு கலைஞர் அவர்களை வரவேற்கக் காத்திருந்த பிரமுகர்கள்மீது ஒரு பார்வைவிடுவோம். தி.மு.க. பத்திரிகைகள் ஈழத்துக்கு வரக்கூடாது என்று நீண்டகாலமாக ஈழத்தில் பிரசாரம் செய்து வருபவரும் 'சினிமா நடிகரைப்போல 'போஸ்' கொடுப்பவருமான ஒருவர் முன்னே நிற்கிறார். இரித்துக்கொண்டே அவர்தான் கலைஞர் அவர்களுக்கு முதலில் மாலை சூட்டுகிறார். உடனே சிவப்பு நீல அச்சு வேலைகளுக்குப் பேர்போன ஒரு பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளருடைய காமிரா 'கிளிக்' என்று சத்தம்போட்டு ஒளியை அள்ளி இறைக்கிறது. கலைஞர் சிரிக்கிறார்!

கூட்டத்தில் முன்னால் நின்ற இன்னொரு தடித்த தோழர் மற்றவர்களை இடித்துத் தள்ளிக்கொண்டு முன்னே ஓடுகிறார்......'கலைஞர் கருணாநிதி இந்திரா காந்தியின் சோசலிசக் கருத்துக்களை ஆதரிக்கிறவர்-அதுபோல ஈழத்தில் உள்ளவர்களும் செய்தால் என்ன?' என்று எத்தனையோ கூட்டங்களில் திடீரென்று கலைஞர் மீது காதல்கொண்டு பேசியதனது புதியபோக்கை மேலும் அம்பலப்படுத்துவது போல கலைஞரைத் தழுவி மகிழ்கிறார்! கலைஞர் சிரிக்கிறார்!



இப்படி இரண்டு மூன்று சுவையான நிகழ்ச்சிகள். பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கார் ஊர்வலம் புறப்படுகிறது.

அன்று மாலையே விசேட பதிப்பு ஒன்றினை வெளியிட்டு 'பொய்ப்பதி' என்னும் பத்திரிகை கலைஞரின் கார் ஊர்வலம்பற்றி செய்திகளைப் பொழிந்து தள்ளுகிறது.

அண்ணா காலமானவுடன் 'கலைஞர்தான் அடுத்த முதலமைச்சர்' என்ற வதந்தி உலவிய வேளையில் 'கலைஞனுக்கு என்ன முதலமைச்சர் வேலை' என்றுகூறி வேறொரு தி.மு.க. பிரமுகரின் புகைப்படத்தை தடபுடலாக எடுத்து (முதலமைச்சர் தெரிவு முடிவு வெளிவந்தவுடன் வெளியிடும் பொருட்டு) தனது மேசை மீது வைத்திருந்தவர்தான் 'பொய்ப்பதி' ஆசிரியர். அது வேறு சங்கதி— இப்போது அதைப்பற்றியெல்லாம்கேட்கக்கூடாது—இன்று பொய்ப்பதிதான் கலைஞரை மிகவும் தடபுடலாக வரவேற்கும் பத்திரிகை!

கலைஞர் கருணாநிதியை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்கிறார்கள். அங்கு சில பிரமுகர்கள் கலைஞருக்கு மாலை சூட்டுகிறார்கள். அண்ணாவின் சிலை திரைப்படத்தில் காட்டப்படக்கூடாது என்று முடிவெடுத்த கூட்டத்தோடு தனியாகச் சேர்ந்தால் அழகில்லை என்று மூவராகச் சேர்ந்த அந்தப் பிரமுகர்கள் கலைஞருக்கு மாலை போடும்போது கைகள் நடுங்காமல் இருக்குமா? நடுங்கிய கைகளைப் பிடித்து நாசூக்காகச் சிரித்து—பேசி நடுக்கத்தை தீர்க்கிறார் கலைஞர்,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பின்பு மட்டுநகர் செல்கிறார். அங்கே பாதி வெறியில் ஒரு பிரமுகர் ராஜ நடைபோட்டு வந்து வரவேற்கிறார். அவர் நிமிடத்துக்கு ஒரு கொள்கையோடு வளர்ந்தவராதலாலும்—எல்லோருக்கும் மாலைபோட்டுப் பழக்கப்பட்டவராதலாலும்—கலைஞருக்கும் மாலைபோடுகிறார் வேறு ஒன்றுமில்லை — கலைஞரைப் பார்த்து உங்களுடைய சிஷ்யர் அண்ணாத்துரை எங்கே?' என்று கேட்கிறார் அந்தப் பிரமுகர். பக்கத்திலிருந்த இன்னொருவர் (இவர் படித்தவர்) ஒருமாதிரி நிலைமையைச் சமாளிக்கிறார். 'அண்ணாவைப்பற்றிக்கூடத் தெரியாத இந்த அப்பாவியார்!' என்று கருணாநிதிவிழிக்கிறார்.

பாவம் குருட்டு அதிர்ஷ்டத்தில் திடீரென்று மட்டக்களப்பு அரசியலுக்கு வந்த ராஜ செல்வச் சீமான்தானே அந்தப் பிரமுகர், தி. மு. க- வரலாறு அவருக்கு எங்கே தெரியப்போகிறது.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் ஏழைத் தொழிலாளிகள் வாழும் மலையகத்தையும் பார்வையிடுகிறார்—பின்பு தமிழ்வேந்தன் வாழ்ந்திருந்த திருகோணமலைக்கும் செல்கிறார்.

கலைஞர் கருணாநிதி இந்த இரண்டு மூன்று நாள் இலங்கைவிஜயத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகள் இரட்டடிப்புச் செய்தன என்பது ஒரு பக்கம் இருக்கட்டும்-தமிழக முதல்வர் கடைசியாக என்ன செய்கிறார் என்பதை இனிக் கவனிப்போம்.......

கலைஞர் அவர்கள் தமிழகம் புறப்படுவதற்குமுன் கொழும்பிலுள்ள ஒரு பூக்கடைக்குள் நுழைகிறார். விலை கூடிய மாலையாக ஒரு மாலை வாங்கிக் கொள்கிறார். நேரே ஈழத் தமிழர் தலைவர் தந்தை செல்வா வீட்டுக்குப் போகிறார். தந்தை அவர்களின் கழுத்தில் மாலையை அணிவித்து இரு கைகளையும் கூப்பி மெய்சிலிர்க்கத் தந்தை செல்வாவை வணங்குகிறார் தமிழக முதலமைச்சர்.

கலைஞரின் பயணம் முடிவுற்றது. எதற்காக ஈழம் வந்தாரோ அந்தக் கடமையை அவர் செய்து முடித்துவிட்டார். ஈழத்திலுள்ள மிகப் பெறுமதியான ஒரு பொருளைப் பார்க்கத்தானே அவர் வந்தார். தந்தை செல்வா அவர்களைப் பார்த்தபின் ஈழத்தில் அவருக்கு என்ன வேலை?

அதோ விமானம் எழுந்து வானிலே பறக்கிறது— தந்தை செல்வா அவர்களுக்கு கலைஞர் நேரில் சென்று மாலை சூட்டினார் என்ற ஆத்திரத்தில் விமான நிலையத்துக்கு அவரை வழியனுப்ப வராத பிரமுகர்கள் வரிசை இதுதான்.

சினிமாபோஸ் பிரமுகர்' தடித்த தோழர், யாழ்ப்பாணத்து மூன்றுகள், மட்டக்களப்பு முட்டாள்.

—"கவரிமான்"

## கட்சிமாறும் பச்சோந்திகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுடன் மக்களுக்கு பலவாய்ப்புகள் கிடைத்திருக்கும்; பல மாற்றங்கள் இந்தநாட்டிலே உண்டாகும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால், கடந்த பத்து மாத காலத்திலும் அப்படியான மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. சில அமைச்சர்கள் தங்களுடைய நிர்வாகங்களை விரைவுபடுத்த முயன்றிருக்கிறார்கள். பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சைப்பற்றி நான் குறிப்பாகக் குறிப்பிட வேண்டும்.

அங்கே விரைவு படுத்தும் நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். மற்றைய அமைச்சுக்கள் நத்தைவேகத்தில்தான் போய்க்கொண்டிருக்கின்றன. பேச்சளவிலேதான் சமதர்மம் இருக்கின்றதே தவிர, செயலளவில் சமதர்மம் இல்லை. மக்களுடைய தேவைகள் உடனுக்குடன் கவனிக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்லாமல் கச்சேரிமுறையை ஒழித்துக் கட்டுகிறோம்; கச்சேரி முறை, எம்மை முன்னர் ஆண்ட பிறநாட்டாரின் ஆதிக்கத்தினுடைய அறிகுறி, அந்த அடிமைச் சின்னத்தை நீக்கி விடுகிறோம் என்று முன்னரும் கூறினார்கள். பின்னரும் கூறினார்கள்.

ஆனால் ஏறக்குறைய ஓராண்டாகியும் கச்சேரி முறை மாற்றப்படவும் இல்லை; துன்பமடையும் மக்களின் அலுவல்களை விரைவாகச் செய்யக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.

பொருள்களின் விலைகள் மலைபோல் ஏறிக்கொண்டு போகின்றன. சமதர்ம ஆட்சியைப் புகுத்து கின்றபொழுது, பல மாற்றங்களைச் செய்கின்றபொழுது இடைக்காலத்திற் பொருள்களின் விலைகள் ஏறலாம், மக்களுக்குச் சிரமங்கள் உண்டாகலாம் என்று ஒருவேளை சொன்னால் அதிலே நியாயமிருக்கலாம். ஆனால் இந்தச் சூழ்நிலையிலே அந்த நியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்நாட்டில் உண்டாக்கப்படும் பொருள்கள் பல எங்களுக்குக் குறித்த காலத்திலே [illegible] பலநீநாக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் முதலியன செம்மையாகத் தொழிற்படாததால் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைக் குறித்த காலத்தில் மலிவான விலையிற் பெறமுடியாமல் இருக்கின்றது.

நாட்டுப்புற மக்களின் துன்பங்களை உணர்ந்தவன் என்ற முறையிலே இதை நான் குறிப்பிடுகிறேன்: அமைச்சர்கள், அல்லது அரசாங்கக் கட்சி உறுப்பினர்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறுகாட்டும் தேயிலைத் தோட்ட நாட்டுப் பாடல்கள்

எட்டு ஆண்டுகளுக்கு முன், 1962 வாக்கில் எழுத்துலகிற்கே புதியவனாக ''சுதந்திரன்'' வார ஏட்டை நுழை வாயிலாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய சமூகக் கட்டுரைகளை எழுதிக்கொண்டிருந்தேன். 1963 பிற் பகுதியில் ''தினகரன்'' ஞாயிறு மலர் மலையகத்திற்கென 'மலையக மக்கள் மன்றம்' என்று ஒரு பகுதியை ஆரம்பித்ததும் அந்தப் பகுதிக்கு எழுத வேண்டுமென்று மனம் உந்திய போது — ஒரு நாள் எனது பாட்டியார் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தார்கள். அந்தப் பாடல் தோட்டத்தில் தொழிலாளர்கள் பாடும் பாடலாகும். அப்போதுதான் ''இது போல எவ்வளவோ பாடல்கள் இருக்கின்றன; இந்தப் பாடல்களில்தான் எத்தனை நயமும் சிறப்பும் இருக்கிறது; இவற்றையே ஒரு கட்டுரையாக எழுதி அனுப்பினால் என்ன?'' என்ற எண்ணமும் பிறந்தது.

உடனே பாட்டியிடமே பாடக்கேட்டு சில பாடல்களைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுதினேன். அடுத்த வாரமே அந்தக் கட்டுரை கருத்துச்செறிந்த ''தோட்டப்பாடல்கள்'' என்ற தலைப்பின் கீழ் வெளிவந்ததோடு பின் அதுவே தொடராக ஐந்து வாரங்கள் வெளிவந்தது.

இந்த கட்டுரைத்தொடர் வெளிவந்ததன் பின்னர் 1964ம் ஆண்டு அட்டன் இலக்கிய வட்டம் எடுத்த பொங்கல் இலக்கிய விழாவிலே 'வாய் மொழி இலக்கியம்' பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதைத் தொடர்ந்துதான் மேலும் மேலும் நாட்டுப்பாடல்களைப்பற்றி அறியத் தொடங்கினேன். அதில் சுவையுங் கொண்டேன்.

பின்னால் ''தினகரன்'' ''செய்தி'' ''வீரகேசரி'' மற்றும் பல சஞ்சிகைகளிலும் மலையகத் தேயிலைத் தோட்ட நாட்டுப் பாடல்கள் — அறிமுகப்படுத்தப்படாத புதிய பாடல்கள் பலவற்றை அறிமுகம் செய்து பல கட்டுரைகள் எழுதினேன். நான் எழுதிய சில நாட்டுப் பாடல் பற்றிய சித்திரங்கள் வானொலியிலும் இடம் பெற்றன. அதோடு மலைநாட்டுப் பாடல்கள் மாத்திரமல்லாது தமிழக நாட்டுப் பாடல்கள் உட்பட எல்லா நாட்டுப் பாடல்களையும் ஆர்வத்துடன் தொகுப்பதை ஒரு பணியாகக்கொண்டேன்.

தோட்டப்புறங்களில் நடக்கும் கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் நான் போகின்ற பொழுது அங்கு எனக்குத் தெரிந்த நண்பர்கள் மூலமும் தொழிலாளர்கள் மூலமும் இவ்வாறு பாடல் திரட்டுவதை ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டுள்ளேன். இந்த வகையில் நாட்டுப் பாடல்களைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்வதிலும் அதுபற்றி கட்டுரைகள் விளக்கபூர்வமான வகையில் எழுத வேண்டுமென்றும் அடிக்கடி தூண்டி உதவிய நண்பர்கள் நா. தர்மலிங்கம் (உலக நண்பர்கள் சஞ்சிகை ஆசிரியர்) தாயுமானவர் ஆகியோர் என் பணிக்குத் துணையாக நின்றவர்கள்.

நாட்டுப்பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதில் பலர் ஈடுபட்டு வருகிறார்கள். தேயிலை, றப்பர் தோட்டங்களில் வழங்கிவரும் பாடல்கள் சமீப காலமாகத் தொகுக்கப்பட்டு பத்திரிகைகளில் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியில் முதன் முதலில் ஈடுபட்டவர் மலைநாட்டு எழுத்தாளர்களின் முன்னோடியாக விளங்கும் ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள்தான். ஆங்கிலத்தில் புலமைமிக்க இவர் மலைநாட்டுப்பாடல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் எழுதிவந்தார். எழுதிவருகிறார். உள் நாட்டுப் பத்திரிகைகளிலும் இப்பாடல்களை அறிமுகம் செய்து வைத்திருக்கிறார். 'டெயிலி நியூஸ்' 'ஒப்சேவர்' 'டைம்ஸ்' ஆகிய ஈழத்து ஆங்கில ஏடுகளில் கட்டுரைகள் எழுதி வருகிறார். ''டைம்ஸ்'' தேயிலை நூற்றாண்டு மலரில் ஒரு பெரும் கட்டுரை எழுதியிருந்தார். 'புதுமைஇலக்கியம்'போன்ற தமிழ் ஏடுகளிலும் எழுதியிருந்தார். ''இரட்டையர்கள்'' என்ற புனைபெயரில் கவிஞர் சரவணமுத்து அவர்களும் பண்டிதர் பஞ்சாட்சர சர்மா அவர்களும் தேயிலைத் தோட்டங்களிலே வழங்கிவரும் நாட்டுப் பாடல்களை வெளியிட்டு அருமையான விளக்கங்களும் எழுதினார்கள்.'' என்று மலையக நாட்டுப்பாடல்களைத் திரட்டி எழுதிய இன்னும் இருவரைப்பற்றி ஈழத்து விமர்சகர் திரு. கனக செந்திநாதன் தனது ''ஈழத்து இலக்கிய வளர்ச்சி'' என்ற விமர்சன நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

மலையகத்தின் மற்றொரு எழுத்தாளரும், விமர்சகருமான திரு. 'சாரல்நாடன்' 1964ல் 'வீரகேசரியில்' 'மலையகக் கதைப் பாட்டு' என்ற ஒரு தொடர் கட்டுரை எழுதியதோடு அதில் பாடல்களையும் தொகுத்து அறிமுகம் செய்தார்.

இவர்களைத்தவிர இன்னும் பலர் அவ்வப்போது சில சில பாடல்களையும் பத்திரிகையின் மூலம் அறிமுகம் செய்து வைத்தார்கள். இவர்களில் நாவலர் நகர் மகாலிங்கம் துரை அருணன், ப. ம. கோதைநாயகி முதலானோர் சில கட்டுரைகள் மூலம் பல பாடல்களை அறிமுகம் செய்து வைத்தனர். இன்னும் திருச்செந்தூரன், தெளிவத்தை ஜோசப், சி. வே. ராமையா, துவரம்பிட்டி சண்முகம், பி. சுப்ரமணியம், மு. சுப்பிரமணியம், ராஜ்மோகன், பரிபூரணர் முதலானோர் ஓரிரு கட்டுரைகள் மூலம் சில பாடல்களை அறிமுகம் செய்துள்ளனர்.

ஏற்கெனவே வெளிவந்த பாடல்களைக் கொண்டு ஒரு குறுநாவலை 'சுதந்திர'னில் எழுதிய ஏ. பி. வி. கோமஸ் சில பாடல்களையும் அறி-

**தொ. சிக்கன்ராஜு**

முகம் செய்து வைத்துள்ளார். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமான பல பாடல்களையும்; அவற்றுக்குத் தரப்பட்ட விளக்கங்களையும் வைத்து, 'இலங்கை இந்தியத் தோட்டத் தொழிலாளர் வரலாற்றிற்கு தோட்டப் பாடல்கள் மூலாதாரமாக விளங்குகின்றன' என்ற பொருள்பட, க. நவஜோதி ஒரு கட்டுரையைத் தயாரித்து இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு கருத்தரங்கில் வாசித்திருக்கிறார் 'அந்தக் கட்டுரையை சில பக்கங்களில் அச்சிட்டும் வெளியிட்டிருக்கிறார்.'

இன்னும்வட்டுக்கோட்டை மு. ராமலிங்கம் அவர்களை

(9-ம் பக்கம் பார்க்க)

## வி. பி. கணேசனின் விளக்கம்!

9-4-71ல் வெளியான சுதந்திரன் பத்திரிகையில் வெளியான 'சுகி' எம். பி. துரை (தலவாக்கொல்லை) ஆகிய இருவரின் கட்டுரைகளுக்கு விளக்கம் அளிப்பது முக்கியமானதாகும். மலைநாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தின் நன்மைக்காகவும் விடுதலைக்காகவும் போராடி வரும் ஜ. தொ. கா. வின் மேலும் அதன் தலைவர் திரு. அஸீஸ் மேலும், இக்கட்டுரையாளர்கள் தாக்குதல் கணைகளைக் கொடுத்துள்ளனர். அதற்குமுன்னர் அவர்களின் கணைகள் சரியானவைதாமா என்பதைத் தெளிவு படுத்திக்கொள்ளவேண்டும்.

கிளனுகலைத் தோட்டத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி, ஒவ்வொரு தொழிற் சங்கங்களினதும், ஆக்கபூர்வ வேலைகளை ஆராயப் புகுந்துள்ள திரு. சுகி, ஜ. தொ. கா. தலைவர் திரு. ஏ. அஸீஸ் அவர்கள் கிளனுகலைத் துப்பாக்கிச் சூடுபற்றி அக்கறை எடுக்கவில்லை என்றும், அதே வேளையில், அல் அக்ஸா தீப்பற்றிப் எரிந்தபோது, இஸ்ரவேல் எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொள்ள 1000 மைல்கள் விமானத்தில் பறந்து சென்றார் என்றும் கொழும்பிலிருந்து 150 மைல்கள் கூட இல்லாத கிளனுகலைக்கு ஏன் வர முடியாது என்றும் கேட்டுள்ளார்.

கிளனுகலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றித் தகவல் கிடைத்ததும், திரு. அஸீஸ் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தோடு தொடர்புகொண்டார். பின்னர் கிளனுகலைக்கு நேரிலேயே விஜயஞ் செய்து தோட்டத் தொழிலாளர்களையும், சூடுபட்டுழலைஞர்களின் குடும்பத்தினரையும் கண்டு ஆறுதல் கூறினார். கொழும்பு திரும்பிய அவர், கிளனுகலை துப்பாக்கிச் சூடுபற்றி விசாரணை கமிஷன் நிறுவ அரசாங்கத்தை தூண்டினார். அதற்கு மந்திரிசபையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்காக நடவடிக்கைகளை நீதியமைச்சர் எடுத்து வருகிறார். இதற்காகப் பன்முறை நீதியமைச்சரையும் அவர் சந்தித்துள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, 'அல் அக்ஸா' தீவைப்பு எதிர்ப்புச் சம்பவங்கள் உலகமெங்கிலும் நடைபெற்றது. ஆனால் வெளிநாடுகளில் நடைபெற்ற எந்தக் கூட்டத்திலும் சரி, திரு. அஸீஸ் சமூகமளிக்கவுமில்லை, அப்படியிருக்க திரு. அஸீஸ் விமானம் மூலம் பறந்து சென்று 'அல் அக்ஸா' தீவைப்பு எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்று கூறுவது அபாண்டமான பொய்யாகும்.

இவ்வாறு ஜ. தொ. கா. பொதுச் செயலாளர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டுப் பாடல்களும் நானும்

அத்தியாயம் (1)

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற தேவைகளுக்கு வழியில்லாமல், வானம் கருக்காது, மழை பொழியாது, பூமி விளையாது வயல்களிலிருந்து அறுத்தடித்துகட்டி,மூட்டை மூட்டையாக வீட்டை நிரப்பும் நிலைமைமாறி வறுமைப் பிணியில் தமிழ்நாடு சிக்கித் தவித்து திணறிய காலமது, சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்—

அந்த வேளையில்தான் உலகெல்லாம் ஆதிக்க வெறியில் வெற்றிகொண்டு கொடி கட்டி ஆண்ட ஆங்கிலேயர்கள், இலங்கைத் தீவின் மலைப்பிரதேசங்களின் மண் வளத்தால்— மழைவளத்தால் செல்வ வளம் பெருக்க துடித்துக்கொண்டிருந்தார்கள். செறிந்த காடுகளை அழித்து மலைகளைத் திருத்தி கோப்பிச் செய்கை செய்ய ஆயத்தமானார்கள்.

காடுகளையழித்து பண்படுத்தி கோப்பிப் பயிர் செய்ய குறைந்த கூலிக்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள்; அதற்கு தமிழ் நாட்டில் கோரத்தாண்டவமாடிய வரட்சியும், வறுமையும் துணைபுரிந்தது; அதே வேளையில் ஜமீன்களின் கீழ் ஒடுக்கப்பட்டு, அன்பமுற்ற ஏழை மக்களின் துயரமும் வழிகோலியது.

அந்தகால கட்டத்திலெல்லாம் இந்தியாவில் சுதந்திரப் போர் உக்கிரமாக நடந்ததால் தாமே தொழிலாளர்களைத் திரட்ட முடியாத காரணத்தாலும், தமிழ் மொழியைப் பேசவும் கேட்டுப் புரிந்துகொள்ளவும் முடியாத காரணத்தாலும் 'ஏஜண்டு'களை வைத்து கூலிக்கு ஆட்களைத் திரட்டத் தொடங்கினார்கள். அந்த ஏஜண்டுகள்தான் 'பெரிய கங்காணிகள்' என்று அழைக்கப்பட்டவர்கள். வெள்ளைத் துரைமார்களின்கீழ் பெரிய கங்காணிகள் 'ஆள்கட்டும்' தமது வேலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

இலங்கையைப்பற்றி அங்குள்ள பலருக்குத்தெரியாது; பெரிய கங்காணிகள் இலங்கையைப் பற்றி இருப்பதையும், இல்லாததையும் கூறி அவர்களை— அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

"குள்ள நரி கொம்பை
…வைத்துக்கொண்டு
இந்தியாவுக்கு
தென் கிழக்கே
இலங்கை என்றதோர்
தேசம்
………
………
………''

என்று இப்படித்தான் இலங்கைத்தீவை முதன் முதல் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

O O

சிலருக்கோ சந்தேகம் இலங்கை மண்ணைப்பற்றி இலங்கையை எப்படியெப்படியோ கற்பனை செய்து பார்த்தார்கள். கேள்விகள் எழுப்பி சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முயன்றார்கள்.

''காற்று மழைகள்
அதிகம் உண்டாம்—
அங்கே
ஏற்ற இறக்கங்கள்
மெத்த உண்டாம்''
………
………''

இப்படி அங்கு மழையும் காற்றும் கொடுமையாக வீசுகிறதே என்றெல்லாம் கேள்விகளுக்குமேல் கேள்விகள் எழுப்பி சந்தேகங்களைத் தீர்க்க முயன்றனர்.

''காற்று மழை
அதிகமில்லை
ஏற்றம் இறக்கம்
மெத்த இல்லை
………
………''

''வாழைப்பழத்திலே
வீடு மெழுகியே
வாசலுக்கு பாக்கு
வெற்றிலையாம்
இப்படிப்பட்ட
இலங்கை சீமையை
கொடுமை சொல்லவும்
காரணமாம்''

என்றெல்லாம் கங்காணியார்கள் சாதுரியமாக பதிலளித்தார்.

O O

ஈழத்துக்கு 'ஆள் கட்டு'வதற்காக கங்காணிகள் ஆலாகப் பறந்தார்கள். ஓடி ஓடி ஆள் பிடிக்க முயன்றார்கள்.

''கங்காணி ஐயாவே
வாருமையா
ஒரு காரியம் சொல்லு
றேன் கேளுமையா
சில்லரை கங்காணி
சேவுகமே—நீக்க
சீமைக்குப் போய்வாங்க
அக்கறையாய்''

அந்த கங்காணிகளைப்பற்றி எல்லாம் அப்போது பேசிக் கொண்டார்கள். ஈழத்திற்கு 'ஆள் கட்ட' அழைத்துக் கொண்டிருந்த கங்காணிகளைப் பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் கொண்டிருந்தார்கள்.

''கங்காணி ஐயா
பயப்படாதே
கப்பல் கடல்கரை
வந்துசேரும்
ஆளுங்க அம்புக
இல்லாட்டி—துரை
வட்டிகள் வாசிகள்
போட்டெடுப்பார்''

ஆள் கட்டிக்கொண்டு போகும்வரை கங்காணிகளுக்கு கவலைதான்; கப்பல் ஏறும்வரை லாபநட்ட கணக்குதான் இல்லாவிட்டால் அவர்களை அனுப்பும் வெள்ளைத்துரைகள் கொடுத்ததற்கு வட்டியும் வாசிகளும் போட்டுவிடுவரார்கள்.

''வெள்ளை சட்டை ஒன்று
போட்டுக்கொண்டார்
வெள்ளை குஞ்சமொன்றை
வைத்துக்கொண்டார்
துள்ளூரார் சீமைக்கு
ஆள்கட்டிப் போவதற்கு
சோக்கைப் பாரடி
தோழிப் பெண்காள்''

''அரை சரி துண்டையும்
வாங்கிக்கொண்டார்
அவர் தகரத் துண்டையும்
சேப்பில் வைத்தார்
கடல் தாண்டியே
சீமைக்கு போவதற்கு
காலத்தைப் பாரடி
பெண்டுகளா''

ஆட்களைத் திரட்டுவதற்காக எப்படி எப்படியோ முயன்றார்கள். சீமான்களைப் போல தம்மை அலங்கரித்துக் கொண்டார்கள். தங்களுக்கு பழக்கமில்லாத சட்டையும், கோட்டும் போட்டு அலங்கரித்துக்கொண்டார்கள்.

எல்லாம்?

''தஞ்சாவூர் முதல்
சேலம் வரையும்
கும்பிட்டழைத்தாராம்
பெஞ்சுக்கு காசுக்கு[illegible]த்
தான்''

O O

கங்காணிகள் இலங்கையைப் பற்றி சொல்வதை கேட்க கேட்க இலங்கைக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# “இவர்களும் மனிதர்கள்....”

குரும்பசிட்டி
**மு. திருநாவுக்கரசு**

வாழ்க்கையில் அழுகையைத் தவிர வேறெதையும் பார்த்திராத ஜீவன்கள் வாசம் செய்யும் சேரிப்பக்கத்திலிருந்து அழுகுரல் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு வருகிறது. மாதத்துக்கொரு சாவு அந்தச் சேரிப்பக்கத்தில் நடப்பது வழக்கமாகிவிட்டது. அழுகுரல் இப்போது பெலத்துக் கேட்கிறது.

சேரிப்பெண் மீனாட்சியினுடைய குரலாகத்தான் இருக்கவேண்டும். அவளுடைய குரலைத்தொடர்ந்து ......சேரிப்பெண்களின் ஒப்பாரி ஆரம்பமாகிறது.

மீனாட்சியின் மகன் இராமன் கழுத்திலே கயிறுபோட்டு தூங்கிச் செத்துப் போனான்......!

ஊரிலே விடியக்கு முதல் கதை பரவத்தொடங்கி விட்டது. படிப்புமில்லாமல்... வேலையுமில்லாமல் பசியோடு போராடிக்கொண்டிருந்த இராமனை...மீனாட்சி வயிற்றுக் கொதிப்பில் ஏச... அவமானம் தாங்காமல் அவன் இந்த முடிவுக்கு வந்திருக்கிறான்... தற்கொலையின் காரணத்தை சிலர் விமர்சிக்கிறார்கள்.

செத்த வீட்டுக்கு வந்த சேரிப் பெண்களெல்லாம்... மீனாட்சியைத் திட்டித் தீர்க்கிறார்கள்.

அவள் ஏசினபடியால் தானும் அவன் தூக்குப் போட்டிருக்கிறான்!

மீனாட்சிக்கு மகனை இழந்த துயரம் ஒரு புறம்... சேரிப் பெண்களின் உள்ளத்தை ஊடுருவும் பேச்சு மறுபுறம்... அவள் துடித்துக்கொண்டிருக்கிறாள்.

அவள் நெஞ்சிலே அலைமோதும் பாச வெள்ளத்தின் பிரதிபலிப்பாக அவள் கண்களில் வழியும் கண்ணீரை...எல்லோரும் நம்ப மறுக்கிறார்கள்.

மகன் செத்த வேதனையிலும் பார்க்க மற்றவர்கள் அவளுக்குக் கொடுக்கும் வேதனைதான் அளவுக்கதிகமாக இருந்தது.

''உவளுக்கு உந்த கண்ணீர் எப்படி வருகுது...நீலி—நீலிக் கண்ணீர் வடிக்கிறாள்...'' வெளிச்சமாக மீனாட்சிக்குக் கேட்கத்தக்கதாகவே ஒருத்தி பேசுகிறாள்.

''கொறணர் வாறவரைக்கும் ஒருதரும் சவத்திலை தொடாதையுங்கோ...'' ஒரு அனுபவஸ்தரின் எச்சரிக்கை இது.

விழிகள் பிதுங்கி...நாக்கு வெளியே தள்ளி...கயிற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பிணத்தைத் தொட அவளுக்கும் இப்போது உரிமையில்லைதான்.

கயிற்றிலே தொங்கிக் கொண்டிருக்கும் இராமனின் சடலத்தை மற்றவர்களைப் போல வெறும் சவமாக மதிக்க பெற்ற உள்ளம் மறுக்கிறது.

அந்தச் சடலம் இனி ஒன்றுக்கும் உபயோகமில்லை... கட்டையிலே எரியவேண்டியதுதான் என்றாலும்... அதைக் காட்சிப் பொருளாக வைத்து மற்றவர்கள் வேடிக்கை பார்க்கும் நிலையில் அந்த சவத்தை இன்னும் தொங்கவிட மீனாட்சி விரும்பவில்லை.

அவள் அந்தச் சடலத்தை கீழே இறக்கிவிடச் சொல்லி யாரையோ பார்த்து மன்றாடுகிறாள்.

அந்தச் சவம் அப்படித் தொங்குவது உண்மையில் அவளுடைய ஆத்மாவுக்கு அந்தரமாகவே இருக்கிறது.

கூடிநிற்கும் கூட்டத்தில் பாதிப்பேர் இன்னும் அவளைத் திட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

அவனுடைய சவத்தைப் பார்க்க கூடிநின்று...அவனுக்காக அனுதாபப் படுகிற இந்தக் கூட்டம்...அவன் வயிற்றிலே கொழுந்து விட்டெரிந்த பசியினால் சுருண்டு சுருண்டு தெருவிழியே நாய் போல திரிந்தபோது...அவனைத் திரும்பிப் பார்த்திருக்கிறதா...?

உழைத்துப் பிழைத்த அவனுக்கு மேலும் நிலத்தைக் கொடுக்காமல் அவன் உழைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த நிலப்பிரபு தர்மலிங்கத்துக்கு எதிராக இந்தக் கூட்டம் குரல் கொடுத்திருக்கிறதா...?

மீனாட்சி இந்தக் கேள்விகளை அவளை ஏசிக்கொண்டிருக்கும் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டால் அவளுக்கு சரியான பதில் கொடுக்க இவர்களால் முடியுமா...?

இராமனின் தகப்பன் வழியைச் சேர்ந்தவர்கள் அவளைச் சவத்துக்குக் கிட்டே போகவிடாமல் தடுத்து ஏசுகிறார்கள். அவள் நிலத்திலே விழுந்து புரண்டு கதறுகிறாள்...

தனக்கென்று எதுவுமே வைத்திருக்காமல் பாதி வயிற்றுக்குக் கிடைத்தாலும் அவனுக்கு அதைப் பகிர்ந்து கொடுக்கும் புனித உள்ளம் படைத்தவள்... நல்ல வாழ்க்கையில்லை... வயிறார உணவில்லை என்ற மனக் கொதிப்பில் அவளையறியாமல் சில வார்த்தைகள் பேசியிருந்தால்... தன்னால் உழைக்க முடியவில்லையே... இந்த வயதிலும் பெற்றவளின் கையை எதிர்பார்க்கும் நிலை இருக்கிறதே என்ற தன்மான உணர்வில் அவன் இந்த முடிவுக்கு வந்தால்... அவள் குற்றவாளியா...? அவன் குற்றவாளியா...? சம சந்தர்ப்பம் வழங்காமல் ...அவன் வாழ்க்கையை வாட விட்ட சமுதாயம் குற்றவாளியா ?

குமுறிக் கொந்தளிக்கும் அவளுடைய கண்ணீருக்கு அவளையா காரணம் காட்டுவது?

மகனை இழந்து துடிக்கும் பெற்ற உள்ளத்துக்கு சாந்தி அளிக்க இவர்களால் முடியுமா?

அவள் இப்பொழுதும் யாரையோ பார்த்து மன்றாடுகிறாள்.

கூப்பிய கைகள்......மங்கிய கண்களிலிருந்து பொங்கி வழியும் கண்ணீர்......அவளைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது.

'' இறக்கிவிடுங்கோ......... என்ரை ராசாவை இறக்கிவிடுங்கோ......''

அவளுடைய புலம்பல் மற்றவர்களுக்கு பைத்தியமாக இருக்கலாம்...... பெற்றவள் அவள்......அவளுக்கிருக்கும் வேதனை அவளுக்குத்தான் புரியும்......!

பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது.

கொறணர் இன்னும் வந்தபாடில்லை.

பிணம் இன்னும் தொங்கிக்கொண்டுதானிருக்கிறது.

ஈக்கள் மொய்க்கின்றன...... நாறத்தொடங்க... அவனைத் தவிர எல்லோரும் மூக்கைப் பிடிக்கிறார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சிலர் பின் வாங்குகிறார்கள்.

அவள் மட்டும் விலகவே இல்லை.

ஏன்...!

அவள் தாய்!

புரையோடிப் போனாலும் புழுத்து நாறினாலும் அனுபவிக்க வேண்டியவள் அவள் தான்.

எல்லோரும் கொறணரையே எதிர்பார்க்கிறார்கள்.

''ஒரு போத்தல் எடுத்து உடைச்சாதான்...கொறணரை கெதியா கொண்டரலாம்...'' அங்கே நின்றொருவன் சொன்னதை சிலர் ஆமோதிக்கிறார்கள்.

விசாரணை என்ற பெயரிலே வெறும் கண்துடைப்புக்காக சட்டத்தையும் நீதியையும் ஏமாற்றி வாழும் அரசாங்க அதிகாரம் பெற்ற ஒரு சில கனவான்களின் சுயநலப் பசிக்காக... ஒன்றும் தெரியாத இந்த ஏழைகளை வேதனையில் ஆழ்த்துவதுதான் கொறணரின் கடமையா... பிரேத பரிசோதனையின் நோக்கமா? கொறணருக்குக் கொடுக்க...சில் போத்தலுக்கு ஒரு பத்து ரூபாவுக்கு இப்போது மீனாட்சியை நச்சரிக்கிறான் ஒருவன்.

செத்தவீட்டுச் செலவுக்கென்று யாரிடமோ பல்லுக் காட்டி கண்ணீர்விட்டு வாங்கிய அறுபது ரூபாவில் ஒரு கசங்கிய பத்து ரூபா நோட்டை கலங்கிய கண்களுடன் மீனாட்சி கொடுக்கிறாள்.

அந்தப்பத்து ரூபாநோட்டு அவளிடமிருந்து விலகிய போது அவள் பட்ட அவஸ்தையை சொல்லவே முடியாது!

அந்தப் பத்து ரூபா நோட்டை நினைத்தே அவள் விம்மி விம்மி அழுகிறாள். பத்து ரூபா மீனாட்சிக்கு நூறுரூபாவுக்குச் சமன். இதே பத்து ரூபா நோட்டு நேற்று இந்தக் குடிசையில் இருந்திருந்தால் மனக்கொதிப்பில் தன் மகனை மீனாட்சி பேசி இருப்பாளா? அவனும் இந்தக் கயிற்றிலே தொங்கியிருப்பானா?

கொறணரை நியமித்தது அரசாங்கம்.

வந்து பார்த்து விசாரிக்க வேண்டியது அவரது கடமை.

பத்து ரூபாவுக்கு அவருக்கு அர்ச்சனை செய்தால்தான் ...அவர் அசைவாரென்றால் இதை நினைத்து வெட்கப்படவேண்டியது அவரை நியமித்த அரசாங்கம்...!

இங்கே மீனாட்சிக்கு ஏற்பட்ட...தேவையற்ற இந்தச் செலவை விதி என்று சொல்ல முடியுமா?

ஏழைகளை ஏமாற்றிப் பிழைக்கத்தான் வசதி படைத்தவர்கள் விதி என்றொரு மயக்கத்தை ஏழைகள் மீது போர்த்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமூக விரோதிகளை அரசாங்கம் தேடிப்பிடித்து சவுக்கடி கொடுக்கவேண்டும்.

படித்தவன் படித்தவனை இப்போது ஏமாற்றுவதில்லை.

பணக்காரன்பணக்காரனை ஏமாற்றுவதில்லை.

படித்தவனும் பணக்காரனும் ஏமாற்றுவது ஏழைகளைத்தான்...!

சட்டம்...ஏழைகளுக்கு சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புக் கொடுக்கத் தவறிவிடுகிறது.

பணம் சட்டத்தை அடிமைப் படுத்திவிடுகிறது.

நேரம் ஒரு மணியைத் தாண்டிவிட்டது.

சவம் வெய்யிலில் காய்ந்து கறுத்துவிட்டது.

கொறணர் இப்போதுதான் தள்ளாடித் தள்ளாடி வருகிறார்.

கொறணரைப் பார்த்ததும் மீனாட்சிக்குப் பத்துரூபா ஞாபகம் வர மனதுக்குள்ளே புகைந்து கொண்டிருக்கிறாள்.

சடலம் இறக்கப்பட்டதும் மீனாட்சிக்கு நெஞ்சிலிருந்து ஏதோ பாரம் குறைந்தது போன்ற உணர்வு ஏற்படுகிறது. தேவையற்ற சில விசாரணைகள் கடமை என்ற பெயரிலே இடம் பெறுகின்றன.

''அவனை ஏன் ஏசினாய்...?'' செத்தவீட்டுக்கு வந்த ஒரு கூட்டம் அவளைப் பார்த்துக் கேட்ட அதே கேள்வியைத் தான் கொறணரும் அவளைப் பார்த்துக் கேட்கிறார்.

இந்த அர்த்தமற்ற கேள்விக்காகத்தானா பத்து ரூபாவுக்கு அர்ச்சனை செய்து இவரைக் கூட்டி வந்தார்கள்......?

இப்படிக் கேட்டுவிடத்தான் மீனாட்சி துடிக்கிறாள்.

''உங்களுக்குள் ஏதோ பிணக்கு இருக்கு...நீ ஏசினபடியால்தானே அவன் தூங்கினவன்...'' நீதவான் என்ற நினைப்பு கொறணருக்கு.

கொறணர் அவளை விடுவதாக இல்லை.

எந்தக் கேள்வியைத் தொடுத்தென்றாலும் இந்த விசாரணையை சிக்கலாக்கினால்தான் அவருடைய பதவியின் பவிசைக் காட்டலாம் ......அவரோடு சேர்ந்து நிற்கும் மற்ற அதிகாரிகளுக்கும் பெருமை கிடைக்கும்.

மீனாட்சியின் கண்ணீர் தான் பேசுகிறது.

நடந்து வந்த பாதையிலே அவள் குடும்பம் கடந்து வந்த வேதனைகள்...சோதனைகளை...அவள் விவரிக்கிறாள்.

பசியோடு போராடி பசியோடு கிடந்த பல நாட்களை நினைவுபடுத்துகிறாள். அவளுடைய பேச்சை அலட்சியப்படுத்துகிறார் கொறணர்.

உண்மையில் இராமன் மீது அனுதாபப்பட்டா இந்த விசாரணையை நடத்தி இவர்கள் சிக்கலாக்குகிறார்கள்...?

இராமனின் தற்கொலைக்குக் காரணம் வயிற்றுப் பசிதான் என்று அறிந்திருக்கும் பாசி பிடித்த இந்த மனித மிருகங்கள் இன்னும் ஏன் விசாரணையை இழுத்தடித்து கண்ணீர் விட்டு கருகிக் கொண்டிருக்கும் அந்த பெண் உள்ளத்தின் பொறுமையைச் சோதிக்கிறார்கள்?

விஷயம்இல்லாமல் இல்லை.

இராமனை ஆத்திரத்தில் பேசி...அவனைவிஷம்வைத்துக் கொன்று... அதன் பிறகு தான் அவனுடைய சடலம் தூக்குக் கயிற்றிலே போடப்பட்டிருக்கிறது... என்று சோடிக்கப் பார்க்கிறார்கள்.

இந்தத் தற்கொலையில் எங்களுக்கு சந்தேகம் என்று சொல்லப் போகிறார்கள். இது கொலை என்று தீர்மானிக்கப் போகிறார்கள்.

பிரேத பரிசோதனை நடத்த வேண்டும் என்று சொல்லிவிட்டு... கடைசியில் காசுதந்தால் கைவிடுவோம் என்று சொல்லப் போகிறார்கள்.

பாழாய்ப்போன ஜென்மங்களே... ஒரு பிணத்தை வைத்து உங்கள் வியாபாரத்தை நடத்த உங்களுக்கு வெட்கமில்லையா...?

வாழ் நாள் முழுவதும் அழுது அழுது... நிம்மதியான வாழ்வின்றி துடித்துக் கொண்டிருக்கும் இந்த ஏழைப் பெண்ணின் இதயக் குமுறலை புரிந்து கொண்டும் புரியாதது போல் ஏன் நடிக்கிறீர்கள்...?

உங்களுக்கு லஞ்சம்தேவையென்றால்... உண்டு கொழுத்து ஏழைகளின் உழைப்பை உறிஞ்சும் பணமுதலைகளிடம் பல்லிளித்து வாங்குங்கள்...

மீனாட்சியின் இதயம் இப்படித்தான் குமுறுகிறது. ஆனால்... அவள் ஒன்றும் பேசவில்லை...

'பிரேத பரிசோதனை செய்யத்தான் வேண்டும்...' கொறணரின் பிடிவாதம் இது.

அவள் மன்றாடுகிறாள் 'உங்கடை மகன் செத்தா... உப்பிடிச் செய்வியளோ...' கண்ணீருடன் கொறணரைக் கேட்கிறாள்.

தன்னுடைய மகனுக்கு ஊசி குத்தினால் கூட உள்ளம் உடைந்து விடும் அந்த ஏழைத் தாய் அவன் இப்போது சவமாகக் கிடந்தாலும் அவனுடைய உடலுக்கு ஊறு நேரக் கூடாது என்று துடிக்கிறாள்.

அவனுடைய நெஞ்சைக் கிழித்து... வயிற்றைவெட்டி அந்த குரூரத்தை நினைக்கவே அவளுக்கு தன்னுடைய உயிர் போவது போன்ற உணர்ச்சியே ஏற்படுகிறது.

''என்ன யோசிக்கிறியள்...'' கொறணர் கூடி நின்றவர்களைப் பார்த்துக் கேட்கிறார்.

''வெட்டிற தெண்டா வெட்டிப்போட்டு...கெதியா சவத்தைத் தாருங்கோ...''

இராமனின் தகப்பன் வழியிலுள்ள ஒருவன் சொல்கிறான்.

ஐயோ வேண்டாம்... என்று அவள் பாசக்குரல் பலமாக ஒலிக்கிறது.

'பாசமுள்ளவள் போல ஏனடி நடிக்கிறாய்... வெட்டட்டும் விடு...'

—ஒருவன் அவளைப்பார்த்துச் சொல்லுகிறான்.

'எடியே சவம்தானடி...' இன்னொருவன் அவளைச் சாந்தப்படுத்துகிறான்...!

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் கொழிக்கும் கிளிநொச்சியில் வன்னியருக்குச் சிலை நிறுவுவோம்!

இலங்கைச் சரித்திரத்தில் அரசியல், பொருளாதார விடுதலைக்குத் தமிழ் பேசு மினத்தைச் சேர்ந்த தலைவர்களே முன்னணியில் நின்றிருக்கின்றார்கள். சாதி, சமய வகுப்புவேற்றுமைகள் இன்றி எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம் என்ற நிலை அன்று இருந்தது. தமிழர்களின் எதிர்காலம் என்ன என்று எவரிடத்தும் ஐயம் தோன்றாத அளவுக்கு தமிழ் தலைவர்களோடு சிங்கள, முஸ்லிம் தலைவர்களும் ஒத்துழைத்தார்கள்.

### அரசியல் லாபத்தில் சிங்களக்கட்சிகள்

காலப்போக்கில் அரசியல் லாபம் பெறுவதற்காக இந்நிலை சற்று தளர்ந்தது. தமிழ்த் தலைவர்களிடத்தில் மட்டுமல்ல தமிழர்களிடத்திலிருந்தும் சிங்கள மக்களைப் பிரித்து எடுத்து அரசியலில் லாபம் காணுவதற்காக பல சிங்களத் தலைவர்கள் குறுகிய மொழி, மதமாகிய, பிரச்சினைகளை அரசியல் பிரச்சினையாக்கினார்கள். இதன் பிரதிபலிப்பாக தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க வேண்டுமென்பதுடன் சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் நலனில் அக்கறை காட்ட மாட்டார்கள் என்பதும் தெளிவாகிற்று.

### தமிழ் தலைவர்களின் தவறுகள்

இலங்கை வெள்ளைக்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது தமிழர்களுக்கு என்று பிரத்தியேகமாக எதையும் பெறாமையையும்—சிங்களத் தலைவர்களின் பெரும்பான்மையும், தீவிர இன வெறியும் இலங்கையில் தமிழர்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லுமென அமரர் வன்னியசிங்கம் உணர்ந்தார்.

### இலங்கை இந்திய வாக்குரிமைச்சட்டம்

சுதந்திர இலங்கையின் சட்ட சபையில் இலங்கை இந்திய வாக்குரிமையைப் பிடுங்குவதற்குக் கொண்டு வரப்பட்ட மிக மோசமான கொடூரமான சட்டத்தால் தமிழர்களின் பலம் பறிக்கப் படுவதையும்—அதற்கு தமிழ் காங்கிரஸ் (அன்று அவர் அங்கம் வகித்த அரசியல் கட்சி—தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம்) உடந்தையாக இருந்ததையும் பலமாகக் கண்டித்தார். தமிழரசுக் கட்சியின் தந்தை திரு. செல்வநாயகத்தோடு காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார்.

### சமஷ்டி அரசியல்

தமிழர்கள் இலங்கையில் பிரிந்து வாழவேண்டும்—தமிழ் நாடு வேண்டுமென அவர் ஒருபோதும் சொல்லவில்லை. இரு இன மக்கள் தங்களைத் தாங்கள் ஆளவும்—ஒரு சமூகத்துக்கு மற்ற சமூகம் கொடுமை இழைக்க முடியாதவாறு தம்மைத் தாமே பாதுகாக்க சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது எனவும்—தமிழர்களுக்கு ஒரு தமிழரசு தேவை எனவும் குறிப்பிட்டார்.

பலர் கூறுவதைப்போல சிங்கள தலைவர்களை எல்லாக் காலங்களிலும் நம்ப முடியாது என்றார். ஆனால் அதற்காக பிரிந்து போக முடியாது. எம்மை நாம் ஆளவும் இலங்கையை மத்திய அரசு ஆளவும் சமஷ்டி முறையே சிறந்தது என்றார்.

முன்னர் ஒரு போது காலஞ்சென்ற பண்டாரநாயக்க சமஷ்டி முறையே இலங்கைக்கு உகந்தது என்று கூறியதையும் எடுத்துக் கூறினார். உலகில் பல இன, மத மக்கள் வாழுகின்ற நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை செயல் படுவதையும்—அதனால் இனம்—மொழி—கலை—கலாச்சாரம் — பாதுகாக்கப் படவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

### தந்தை செல்வாவும்—தமிழரசுக்கட்சியும்

தமிழர்களின் நலனை மனதில் வைத்து வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களை ஒன்று சேர்த்து தமிழரசுக் கட்சியை நிறுவினார். தமிழ் மக்களுக்கு மிகப் பிரதானமான தேவைகளான (நாலு) 4 அடிப்படைக் கொள்கையுடன் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். நேர்மையான ஒரு தலைவராக எந்த அரசியல் தலைவராலும் போற்றப்படும் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தை தலைவராக ஏற்றுக் கொண்டார்.

### சிங்கள குடியேற்றம்

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்றங்களை அரசாங்கச் செலவிலேயே நடத்தி வருவதைக் கண்டித்தார். அதைத் தடுப்பதற்கு முழுமூச்சாக ஈடுபட்டார். குறிப்பாக அல்லை, கந்தளாய், கல்லோயாப் பள்ளத்தாக்கு இவ்விடங்களுக்கு தமிழ் மக்களைக் குடியேற்ற இடையறாது முயற்சித்தார்.

### வடமாகாணம்

வவுனியா, கிளிநொச்சி போன்ற பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றம் அரசாங்க செலவில் மும்முரமாக நடைபெற்றது வடமாகாணத்தில்—குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் வன்னியரின் நீண்ட சொற்பொழிவுகளால் பல பகுதிகளிலிருந்தும் — கிளிநொச்சிக்கு மக்கள் குடியேற முன்வந்தனர். கிளிநொச்சியில் குடியேறிய சகல குடியேற்றங்களையும் அமரர் வன்னியசிங்கம் அடிக்கடி வந்து பார்த்தது மட்டுமல்ல விவசாயிகளோடு கலந்தும் உரையாடினார்.

முத்து சுப்பிரமணியம்

### தமிழரசுக் கட்சியின் பங்கு

குடியேற்றத் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதில் இருந்துகுடியேற்றத் திட்டங்களுக்கு மக்கள் போய்க் குடி அமர்ந்தது முதல் அங்கு வசிக்கும் சகல நிலைகளையும் தமிழரசுக் கட்சி மும்முரமாகச் செய்து வந்தது. தற்போதும் செய்து வருகிறது. ஆனால் இதற்கு ஆக்கப் பணியாக பணி புரிந்தவர் அமரர் அவர்களே!

### திருகோணமலையில்

பிரிட்டிஷ் கடற்படையினர் வெளியேறியபோது வேலை அற்றுப் போன சகலருக்கும் திருமலைப் பன்குளம் குடியேற்றத் திட்டத்தில் காணி பெற்றுக் கொடுத்தார். இதனால் இன்று பன்குளத்தில் நாம் தமிழர்களையும் காண முடிகின்றது.

### அரசியலில்

சமஷ்டி அரசியல் கோரிப் பெறுவது சாத்திமாகா விட்டால் போராட்டமே என அறிவித்தார். 1957 பிரதமரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள் தருவதாகப் பிரதமரே வாக்களித்தார். தமிழர்களின் துரதிஷ்டம் வெகு குறைத்தகால வாழ்வோடு அவர் அமரர் ஆகிவிட்டார்.

### குடியேற்றங்களின் தலைவன்

தமிழ் மக்கள் குடியேறிய சகல குடியேற்றங்களுக்கும்-தலைவனாக—வழிகாட்டியாக அவரே நின்றார். சொல்லால் மட்டுமல்ல செயலாலும் செய்து காட்டினார். பூநகரி—மன்னார் வீதியில் அவரால் துப்பரவு செய்யப்பட்ட காடுகளில் இன்று பல நிலமில்லாதவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இக் காணிகள் அங்கு வாழ்பவர்களுக்கு சீக்கிரத்தில் கிடைத்துவிடும். தமிழர்களின் நிலத்தில்—தமிழ் பிரதேசத்தில் எப்பொழுதும் சிந்தனையுள்ளவராகவே வாழ்ந்துவந்தார்.

### அமரருக்குச் சிலை

கொள்கை வீரன்—குணக்குன்று ஆகிய எமது தலைவனுக்கு ஓர் குடியேற்றத் திட்டம் நிறைந்த தொகுதியில் சிலை வைப்பது சாலப் பொருத்தமானதே.

கிளிநொச்சியில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட கணேசபுரம் குடியேற்றத்தில் பிறந்து வளர்ந்த திரு. இ. நடராசா பட்டினசபை அங்கத்தவர்—திருநகர் குடியேற்றத்திட்டத்தின் பட்டினசபை அங்கத்தவரும் கிளிநொச்சிப் பட்டின சபைத் தலைவருமான ச. சு. முருகேசு, திருவையாறு குடியேற்றத்திட்டத்தின் பட்டின சபை அங்கத்தவர் திரு. பொன்னம்பலம், குமரபுரம் குடியேற்றத்திட்டத்தின் பட்டினசபை அங்கத்தவர் திரு. க. நடேசலிங்கம் (துணைத் தலைவர்பட்டின சபை) கூட்டாக கிளிநொச்சிப் பட்டின சபைஇவ்வரியதொண்டினைச் செய்து கிளிநொச்சியின் சரித்திரத்துக்கு அமரர் வன்னியசிங்கத்துக்கு கைமாறு செய்கின்றது. இது சாலச் சிறந்த தொண்டாகும். இதனால் கிளிநொச்சி வன்னியனார்கு முதலில் சிலை வைத்த பெருமையைத் தேடிக்கொள்ளுகின்றது. இதனால் கிளிநொச்சித் தொகுதியே பெருமை பெறுகின்றது.

## இவர்களும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'அவன் சாம்பலாய் போனாலும்... அவன் தான் எனக்கு உயிர்...' அவளுடைய பாசக்குமுறல் அங்கே நிற்கும் மனித பாறைகளில் முட்டி மோதுகிறது.

'நாசமா போ...' ஒருவன் அவளைத் திட்டுகிறான்.

'உயிரோடை இருக்கையுக்கைகூட அவனிலை முள்ளுக் குத்தினுக்கூட எனக்கு தாங்காது... அவன்ரை சவத்தைக் கீறிக் கிழிச்சு... அவன்ரை ஆவியை வருத்தாதையுங்கோ...' அவளுடைய இதயக் குமுறலுக்கு அங்கே நின்றவர்களின் இதயங்கள் இன்னும் இரும்பாகவே நிற்கின்றன...

'சுறுக்கா சவத்தைகோடிப் பக்கம் கொண்டு போங்கோ' கொறணர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவு போடுகிறார்.

'அவன் சவமில்லை...அவனை விடுங்கோ ...அவனை வெட்ட விடமாட்டேன்...உங்களுக்கு காசுதானே தேவை......'

வெறிபிடித்தவள் திடீரென்று காதுக் கம்மல்கள் இரண்டையும் பிடுங்கி கொறணரின் கையில் வைக்கிறாள்.

'இதை வைச்சுக் கொண்டு என்ரை ராசாவின் சவத்தை என்னட்டை தாருங்கோ!

கம்மல்களைக் கொடுத்த தைரியத்தில் உரிமையோடு கொறணரைப் பார்த்துக் கேட்கிறாள்.

கம்மல்களை அவள் பிடுங்கிய வேகத்தில் காதிலிருந்து இப்போது இரத்தம் கட்டிப் போய் கிடக்கிறது.

எவ்வளவு பணம் கொடுத்தென்றாலும் சவத்துக்கு ஊறு நேர விடக்கூடாதென்ற துடிப்பு அவளை நிறைந்து நிற்கிறது. வாயாலே கேட்காமல்... கிடைக்க வேண்டியது கிடைத்து விட்டதென்ற சந்தோசம் கொறணருக்கும் அவருடைய கூட்டத்தினருக்கும்...

இராமனின் சடலம் வெட்டாமல் கொத்தாமல் கிடைத்துவிட்டதென்ற ஒரு மகிழ்ச்சி அவள் வேதனையிலும் அவளில் மலர்கிறது.

அவனுடைய சாவுக்கு அவள்தான் காரணம் என்று அவளை ஏசிக்கொண்டிருந்தவர்களும் அங்கேதான் நிற்கிறார்கள்...! இவர்கள் எல்லோரும் மனிதர்களாக வாழ... மறுபிறவி எடுப்பார்களா...?

இராமனின் இறுதிப் பயணத்தை நீர்த்திவலைகள் நிறைந்த விழிகளுடன் பார்த்து விம்மி வெடித்துக் கொண்டிருக்கிறாள் மீனாட்சி.

அவளுடைய அழுகுரல் எட்டாத இடத்துக்கு அவன் நேற்றே போய்விட்டான்.

அவளுடைய அழுகுரல் கேட்காத அளவு தூரத்துக்கு அவனுடைய சவ ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது.

([illegible])

## கட்சிமாறும் பச்சோந்திகளே....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடைய தொகுதிகளிலே என்ன நிலைமை இருக்கின்றதோ நானறியேன். அதனைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், தமிழ்ப் பகுதிகளிலே நடக்கும் தில்லுமுல்லுகளை அங்குள்ள நிர்வாகத்தின் குறைகளை எதிர்க்கட்சி உறுப்பினன் என்ற முறையில் மட்டுமன்றி துன்பமடையும் மக்களுடைய அல்லலில் சிக்கியிருக்கின்ற மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலும் நான் கூறவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே இப்பொழுது என்ன நடக்கின்றது என்பதை உதாரணத்துக்காகச் சொல்கின்றேன். ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொழுது நிறுவப்படுகின்றன. ஒவ்வொரு ஆரம்ப கூட்டுறவுச் சங்கத்துக்கும் நான்கு பேரைப் பொதுமக்களின் பிரதிநிதிகளாக நியமிக்க வேண்டும். அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் தாங்கள் விரும்பியவர்களை நியமிக்கிறார்கள். அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளானபடியால் அவர்கள் தங்கள் உரிமையைப் பயன்படுத்துவதை நாம் குறைசொல்லவில்லை.

அவர்கள் நல்ல முறையில் நடக்காவிட்டால் அடுத்த முறை அவர்கள் வரமுடியாது. அவர்களுக்குத் தண்டனை இருக்கின்றது. எங்களுடைய பகுதிகளிலே நாங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சில அமைச்சர்கள், நாம் பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள், எங்கள் தொகுதி நன்மையைக் கருதுகின்றவர்கள் என்ற முறையில் எங்களையும் மற்ற உறுப்பினர்களைப் போல் நடாத்துகின்றார்கள். ஆனால் சில அமைச்சர்கள் என்ன செய்கின்றார்கள்? எங்களுடன் தேர்தலில் நின்று தோற்றவர்கள் கொடுக்கும் பெயர்களைத் தான் எடுக்கின்றார்கள் ஒரு சாட்டுக்காக மாத்திரமே எங்களைக் கேட்கின்றார்கள். எங்களைச் சாட்டுக்குக் கேட்டுப் பார்க்கின்றார்கள்.

எனவேதான் நாங்கள் சொல்லுகிறோம், நல்லவர்களை, நேர்மையானவர்களை, தகுதியானவர்களை நியமியுங்கள் என்று.

அரசியலில் பலவருட காலமாக ஈடுபட்டிருப்பவர்கள், ஒரு கட்சியைவிட்டு ஒரு கட்சிக்கு ஓடிவருபவர்கள் யார்? நன்மை விரும்பிகள்; பச்சோந்திகள். இவர்கள்தான் உடனே ஒரு கட்சியைவிட்டு இன்னொரு கட்சிக்கு ஓடி வருவார்கள். இத்தகையவர்கள் சிங்களப் பகுதிகளிலும் உண்டு. அப்படியாக ஓடி வரும் பச்சோந்திகளின் எண்ணப்படி பொறுப்பான பதவிகளுக்கு ஆட்களை நியமித்தால் இந்த நாடு ஒரு போதும் உருப்பட முடியாதென்பதை நான் சொல்லி வைக்க விரும்புகிறேன்.

(தொடரும்)

### அறிவித்தல்

சுதந்திரன் விற்பனையாளர்களுக்கு


தமிழினத்தின் இலட்சிய ஏடான 'சுதந்திரனை' விற்பனை செய்து பணத்தை ஒழுங்காக அனுப்பிவைக்கும் விற்பனையாளர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனினும் ஒரு சில விற் விற்பனையாளர்களிடம் இருந்து பணம் வருமதியிலுள்ளது. இவ்விதம் வருமதியாயுள்ள பணத்தை தயவு செய்து உடன் அனுப்பி வைக்குமாறு இவர்களைக் கனிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். விற்பனையாளர்களிடம் இருந்து பாக்கிப் பணம் 20—5—71-ந் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கப் பெறுவிட்டால் 'சுதந்திரன்' இதழ்களை அவர்களுக்குத் தொடர்ந்து அனுப்ப முடியாமலிருக்கும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நிர்வாகி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த ஆங்கிலேயர்



டாக்டர் பி. யு. போப் என்பவர், பிறந்த நாட்டாலும் பேச்சு மொழியாலும் தமிழ் நாட்டுக்கும் தமிழுக்கும் அந்நியராவார். ஆனால், அந்தப் பெருமகனார், தமது பத்தொன்பதாம் வயதில் தமிழ்நாடு வந்து, தமிழைப் பயின்று அதிலே பெரும் புலமை பெற்றார். தமிழின் அருமை பெருமைகளை அவர் அறிந்து வைத்திருந்தது போல, நம் நாட்டுத் தமிழ்ப் புலவர்கள்கூட அறிந்திருக்கிறார்களா என்பது ஐயப்பாடே.

நம்மவர்களிலே பலர், சங்ககால இலக்கியங்களைத் தங்கள் தலைமீது வைத்துக் கொண்டு, கூத்தாடுகின்றனர். இடைக்கால புராண—இதிகாசங்கள், சாத்திர—தோத்திரங்கள் என்றால், வெறுத்து ஒதுக்குகின்றனர்.

வேறு சிலர், புராண இதிகாசங்களை—சாத்திர தோத்திரங்களை வாழ்த்தி வழிபடுகின்றனர். சங்ககால இலக்கியங்களென்றால், புறக்கணித்து ஒதுக்குகின்றனர்.

ஆங்கிலேயரான போப் பெருமகனார், தமிழிலுள்ள தரமான இலக்கியங்கள் அனைத்தையுமே பயின்றார். அவற்றின் அருமை பெருமைகளை வாயாரச் சொல்லி வாழ்த்தினார். இந்தியத் தமிழகத்தில் வாழ்ந்தபோது மட்டுமல்ல; இங்கிலாந்துக்குத் திரும்பி, அங்கு தங்கியிருந்தபோதும்!

சங்க இலக்கியமான திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அத்துடன், புராண பாணியிலான தோத்திர இலக்கியமான திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

போப், தமிழ் அன்னையைத் தன் தாயாக சுவீகரித்துக் கொண்டார். தான் பெறாத பிள்ளையை சுவீகாரம் எடுக்கும் தாயருண்டு. ஆனால், போப் அவர்களோ, தன்னைப் பெறாத தமிழன்னையை—தன் பத்தொன்பதாம் வயதிலே—சுவீகாரத்தாயாக ஏற்றுக் கொண்டார். இஃதொரு புதுமை!

லண்டன் ஆகஸ்டுபோர்டு பல்கலைக் கழகத்திலே தமிழாசிரியாராக இருந்து,

**ம. பொ. சி.**

ஆங்கிலேயருக்குத் தமிழ் பயிற்றுவிக்குமளவுக்கு அவர் தமிழிலே புலமை பெற்றிருந்தார்.

ஆம்; நம் நாட்டிலே நம்மவர்களான தமிழர்களிலே பலர் ஆங்கில மொழிக்கு அடிமைப்படுவதைப் பெருமையாக நினைத்த அந்த நாளிலே, ஆங்கிலேயரான போப் அவர்கள், தமிழ்த் தாய்க்குத் தொண்டரானாரென்றால், அதுவன்றோ தமிழின் பெருமை!

போப் அவர்கள், தாம் மரணமுற்றால், தமது கல்லறையில் "போப்—ஒரு தமிழ் மாணவர்" என்று பொறிக்குமாறு முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தாராம்.

அவரன்றோ தமிழின் அருமையை உணர்ந்தவர்! அவரன்றோ தமிழின் ஆழத்தை அறிந்தவர்! நம்மவர்கள் அற்பசொற்ப அளவில் தமிழ் மொழியின் இலக்கண—இலக்கியங்களைப் பயின்றதுமே, 'புலவர்' என்றும், 'வித்துவான்' என்றும், 'பேராசிரியர்' என்றும் பட்டங்களைத் தங்கள் பெயருக்குமுன்னே போட்டுக் கொள்வதிலே பெருமை காண்கின்றனர். இவர்களுடைய படிப்பு, போப்பையர் படிப்போடு உரைத்துப் பார்க்கமுடியுமா?

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதுகூட எளிதாகஇருக்கலாம். சைவசமய சாத்திரமாகவும் விளங்குகின்ற திருவாசகத்தை, கிறித்துவரான—ஆங்கில நாட்டில் பிறந்தவரான—போப், ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதென்பதென்ன எளிதா? அரிது! அரிது!! அரிது!!! அந்த அரிதான செயலை எளிதாகச் செய்து முடித்தார் போப். அதுவும் எண்பது வயதை அடைந்து விட்ட முதுமைப் பருவத்திலே! அவரன்றோ தமிழ்த்தொண்டர்!

'கல்வி கரையில, கற்பவர் நாள் சில' என்ற பொன்மொழியின் பொருளுணர்ந்தவர் போப். அதனால், மலை போன்ற தமிழறிவு பெற்றிருந்தும், தமது கல்லறையிலே, 'தமிழ் மாணவர்' என்று பொறிக்கச் சொன்னார்.

பன்னிரண்டு சூத்திரம்—நாற்பதே வரிகள்—சைவசாத்திரமான சிவஞான போதம். ஆனால், அதனை முதனூலாக்கி, 13 வழி நூல்கள் தோன்றின, அதனினும் பெரிய அளவில்! நாற்பது வரிகள் கொண்ட பன்னிரண்டு சூத்திரங்களுக்கு எழுதப்பட்ட வியாக்கியானங்கள் கொஞ்சமா? 'மாபாடியம்' ஒன்றே போதும் சிவஞான போதத்தின் பெருமையை உணர்த்த!

விஞ்ஞானியரெல்லாம், படைக்கப்பட்ட பிரபஞ்சத்தின் அருமை பெருமைகளை அறிய முயல்கின்றனர். அந்த முயற்சியே இன்னமும் முடியவில்லை—தொடர்கின்றது.

மெய்ஞ்ஞானியான மாணிக்கவாசகர், படைத்த பரம்பொருளின் அருமை

(9-ம் பக்கம் பார்க்க)

# தனித் தமிழில் நடைபெற்ற கத்தோலிக்க திருமணம்



தமிழன் சுதந்திர இயக்கமான தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும் கட்சியின் பொதுச் சபை, மத்திய செயற்குழு உறுப்பினரும், தமிழரசு வாலிப முன்னணியின் முன்னாள் உப தலைவரும் கட்சியின் விடுதலைப் போராட்டங்களில் மூன் நின்று உழைத்தவரும் சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு போராட்டங்களில் தொண்டர் படை குழுத் தலைவராகவும் உடுவில் தொகுதி உண்ணா விரதபோராட்டத்துக்கு தலைமை தாங்கி நடாத்தியவரும், அகில இலங்கை பட்டின சபைகள் சமாச யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதியும், சுன்னாகம் பட்டின சபை உறுப்பினருமான திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஜே.பி. அவர்களுக்கும் நவாலி செல்வி திரேசா சிறில் பீ.ஏ. (இலங்கை) அவர்களுக்கும் சென்ற 5-2-71 நவாலி புனித பேதுரு புனித பாவிலு தேவாலயத்தில் கட்டளைக் குரு வண பிதா மேரி யோசேப்பு அடிகளார் உதவி புரிய அதி வண பிதா நீ. ம. சவிரிமுத்து அடிகள் அவர்களால் லத்தீன் மொழி அல்லாத தனித் தமிழ் மொழியில் திருப்பலிப் பூசையும் திருமணச் சடங்கும் நிறைவேற்றி வைத்தார்கள்.

தனித் தமிழில் நடைபெற்ற திருமணப் பதிவுக்கு தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்கள். மணமக்களின் சாட்சிகளாக திரு. வ. ந. நவரத்தினம் பா. உ. அவர்களும் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும் ஒப்பமிட்டார்கள்.

திருமணப் பதிவு முடிந்த பின் குருமனையில் இருந்து வெளியேறும் போது எடுக்கப்பட்ட படமே இது.

பிற்பகல் 5 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய மைதானத்தில் பொது மக்களாலும் கட்சிக் கிளைகளாலும் சுன்னாகம் பட்டின சபை அங்கத்தவர்களாலும், ஊழியர்களாலும் கொடுக்கப்பட்ட பொது வரவேற்பு வைபவத்துக்கு யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. யோசேப்பு அவர்கள் தலைமை தாங்கினார்.

திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், சு. நடராசா, திருச்சிற்றம்பலம், ச. முத்துலிங்கம், சி. கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# தத்தை விடுதூது

**அத்தியாயம் (15)**

**திருமதி. பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கம்**

காலம் என்ற வாடாமலரில் இருந்து நாட்கள் என்ற நறும் இதழ்கள் யாருக்கும் கவலைப்படாமல் உதிர்ந்து கொண்டேயிருந்தன. சரவணன் தன் தலையில் விழுந்த பேரிடியில் இருந்து மீட்சி பெற்றதாகத் தெரியவில்லை. சவரம் செய்யப்படாமல் தன் இச்சைக்கு நீண்டு வளர்ந்த தாடியுடன் கலைந்த கேசத்துடனும் திண்ணைக் குந்தில் அமர்ந்திருக்கிறான் சரவணன். அவன் இருந்த இடத்தில் இருந்து பார்க்கும் போது அடுத்த வீட்டு ஈரப்பலா மிகவும் நன்றாகத் தெரியும். பாலர்களாக இருந்த போது சிவகாமியும் அவனும் விளையாடிய காட்சிகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவன் நினைவுக்கு வருகின்றன. நினைவுக்கு வராதவற்றைக் கூட அவன் வலிந்து நினைவு படுத்திக் கொண்டான். அவற்றைத் திரும்பத் திரும்பத் தன் உள்ளத்திரையிற் பதித்துப் பார்த்து அந்த நினைவில் இன்பமடைவதில் ஒரு தனிப்பிரியம் அவனுக்கு.

அன்றும் அப்படித்தான் அவன் எண்ணம் என்ற இரையை அசைபோட்டுக் கொண்டிருந்தான். சிறிது தள்ளிப் படுக்கையில் தன் உடலுக்கு மட்டும் சிறிது ஆறுதலைக் கொடுத்து உள்ளத்தை ஆறுதற்படுத்த முடியாத நிலையில் அவனையே உற்றுப் பார்த்தபடி படுத்திருந்தார் தம்பிமுத்துப் பிள்ளை. தெருவாயிலில் நின்று கனகசுந்தரம் மட்டும் புதினம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது திடீர் எனச் சரவணனின் பார்வை சுவரின் மேற்பாகத்திற் பதிகிறது. அங்கே மாட்டப்பட்டிருந்த படங்களில் ஒன்று அவன் கவனத்தை ஈர்க்கிறது

அந்தப் படத்தில் இருப்பது சிவகாமியும் அவனுந்தான். அவள் கழுத்தில் இருந்து இடதுபுறத் தோள் வழியாகத் தவழ்ந்து கொண்டிருக்கிறது அவன் தன் கைபடப் பொறுக்கிக் கோர்த்துக் கொடுத்த மல்லிகைச்சரம். அந்தப் படத்தை அவர்கள் இருவரின் தலையிடி தாங்க முடியாமல் தம்பிமுத்துப்பிள்ளை யாரிடமோ வாங்கிவந்த புகைப்படக் கருவியால் எடுத்திருந்தார். அதே படம் ஒன்று சிவகாமி வீட்டுச் சுவரிற் கூடத் தொங்கிக்கொண்டிருக்கும். அவளும் அவனும் இந்தப் படத்தின் கீழ்நின்று தங்கள் எதிர்கால வாழ்வைப் பற்றி எப்படியெல்லாமோ கற்பனை செய்திருக்கிறார்கள். இன்று அது கற்பனையாகவே முடிவடைந்துவிட்டது.

சிவகாமி......! படத்தில் இருந்த அவளை அவன் மானசீகமாக அழைத்தான் நீ என்னை மறந்து விட்டாயா சிவகாமி? உன்னால் என்னை எப்படி மறக்க முடிந்தது? அப்படி என்னால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. நம்பவுந்தான் முடியவில்லை. உன்னால் என்னை மறக்கமுடியாது சிவகாமி. என்னைப் பார்க்க முடியாமல் என்னுடன் பேசமுடியாமல் நீ வலோத்காரமாகத் தடை செய்யப்பட்டுள்ளாய். அதற்குக் காரணம் உன் பெற்றோராக இருந்தாலும் தனிப்பட அவர்களைமட்டும் குற்றஞ் சாட்ட முடியாது. ஆயிரமிருந்தாலும் உன் சம்மதமின்றி இந்தத் திருமணம் நிட்சயமாகமுடிவாகியிருக்க முடியாது. இருக்கவே முடியாது. ஆகவேதான் எனக்கு நீ துரோகஞ் செய்கிறாய் என்று என் மனங் குமுறுகிறது. ஏன்? என் அண்ணாவும் அப்பாவும் கூட உள்ளம் குமுறுகிறார்கள். நானும் அப்படித்தான் நினைக்கிறேனே தவிர என்னால் அதை நம்ப முடியவில்லை. பொருளில்லை என்ற ஒரேயொரு காரணத்திற்காக அறியாப் பருவத்தில் இருந்து அன்புகாட்டி வந்த என்னை வெறுத்து ஒதுக்கிவிட்டாயா...? முத்துக்குமாரனுடன் நீ இன்பமாக வாழமுடியுமா சிவகாமி...? வாழமுடியுமா? சரவணன் மனப்போராட்டத்தின் மதியில் துயரைத் தாங்க முடியாது தலையை மடியிற் புதைத்தபோது 'படார்' என ஒரு சத்தங் கேட்டது.

அவன் ஆச்சரியத்தோடு தன் தலையை நிமிர்த்திப் பார்த்தபோது கனகசுந்தரனும் தம்பிமுத்துப்பிள்ளையும் நிலத்தில் எதையோ வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தனர். அவனும் அவர்கள் பார்த்த திசையில் தன் கண்ணோட்டத்தைச் செலுத்தினான். அடுத்த கணம் அவன் கண்கள் சுவரின் மேற்புறத்தை அண்ணாந்து பார்த்தது.

அங்கே படம் இருந்த இடம் வெறுமையாக இருக்க கண்ணாடிச் சட்டமிடப்பட்டிருந்த அந்தப் படம் அவன் உள்ளத்தைப்போல் நிலத்திற் சுக்குநூறாகிக் கிடந்தது. அவன் எழுந்து சென்று தரையில் சுக்குநூறாகக் கிடந்த அந்தப் படத்தை எடுத்துப் பார்த்தான்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் — ஓர் உலகப் பேரிலக்கியம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது முதுரைகளில் எதார்த்த வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த ஞானமும் எல்லோருக்கும் பொருந்தக் கூடிய எதார்த்த நோக்கும் இடம் பெற்றுள்ளன.

திருக்குறளின் மூன்ருவது பகுதியான இன்பத்துப் பாலில் திருவள்ளுவர் மனித உறவுகளையும் ஆன்மாவையும் நுட்பமாகக் கூர்ந்துணரும் உண்மையான உணர்ச்சிமயமான கவிஞராகவும் காட்சியளிக்கிருர். அவர் குடும்பமே சமுதாயத்தின் அடிப்படைக் கூருகும் என்று கருதுகிருர்.

அவசரக் கடமை

திருக்குறள் எழுதப்பட்ட காலம் இன்னது என்று இன்னும் திட்டவட்டமாக நிறுவப்படவில்லை என்பது யாவரும் அறிந்த செய்தியே. கி.மு. 200 முதல் கி.பி. 800 வரை இதன் காலத்தைப் பலரும் பலவாறு கூறியுள்ளனர். இதற்கு விடைகாண்பது சமுதாயத்தையும் இலக்கியத்தையும் ஆராயும் சரித்திர ஆசிரியர்களை எதிர்நோக்கும் அதியவசரக் கடமையாகும்.

ஆயினும் தனது கற்பனை வளத்தாலும், கருத்துக்களாலும், உண்மையான அறிவைப் பெறும் தாகத்தினுலும், தனது சமய தத்துவார்த்தக் கருத்துக்களுக்கும் மேலான தாகநிரந்தரமான ஜீவாதாரமான முக்கியத்துவம் கொண்டுவிளங்கும் அதன் மனிதாபிமான நோக்கினுலும் திருக்குறள் தொன்மைவாய்ந்த தமிழ் இலக்கியத்துக்கு நிரந்தரமான புகழைத் தேடித் தந்துள்ளது என்பதே யாவற்றிலும் முக்கியமானதாகும்.

திருவள்ளுவர் அற்புதமான சொல்லாட்சித் திறன் மிக்கவர். மொழியின் வலுவையும் அழுத்தத்தையும் தெள்ளத்தெளிவாக உணர்ந்தவர். அவர் அறிஞர் பெருமக்களை வில்லேர் உழவரிலும் வலிமைமிக்க சொல்லேர் உழவராகக் காண்கிருர்.

திருக்குறளின் 1330 குறட்பாக்களும் பண்டைத் தமிழ் மொழியின் வளத்தையும், ஞானச் செறிவையும் தெள்ளத்தெளிவாகப்புலப்படுத்துகிறது. பண்டைத் தமிழகத்தின் அறிவு செல்வத்தையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலின் ஆழ்ந்த பொருள் நயத்தை, நூலாசிரியர் சொற்களைக் கையாளும் திறனும், தேர்ந்த சொற்களைத் திரும்பத் திரும்பப் பிரயோகித்து வலிமையூட்டும் சூட்சுமமும் நன்கு புலப்படுத்துகின்றன.

திருவள்ளுவரின் திருக்குறள் தனிச் சிறப்புவாய்ந்த தத்துவ நூலாகும். கவிதைப் படைப்பாகும். அற நூலாகும். ஈராயிரம் ஆண்டுத் தொன்மைவாய்ந்த இந்தத் தமிழ்ப் பேரிலக்கியம் நிரந்தரமான மானிடப் பண்புகளை அற்புதமான முறையில் சித்தரிக்கிறது.

இந்நீதி நூல் நான் மறைகள், ராமாயணம், மகாபாரதம், பஞ்சதந்திரம், மற்றும் காளிதாசன், சூத்ரகன் ஆகியோரின் இலக்கியங்கள் அனைத்தோடும் ஈடிணையாக இணைந்து நிற்கும் மாபெரும் இந்திய இலக்கியப் படைப்புக்களில் ஒன்ருகும். மேதையான இந்தத் தமிழ்க் கவிஞரின் அற்புதமான படைப்பு உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பண்டையகாலத்திய தலைசிறந்த கிரேக்கக் கவிதைகளோடு போட்டியிட்டு நிற்கக் கூடியவையாகும்.

சோவியத் யூனியனில் திருக்குறள் ஆழ்ந்து ஆராயப்பட்டுவருகிறது. இந்நூல் எப்போது தோன்றியது, எங்கு தோன்றியது, இந்நூலுக்கும் ஏனைய தமிழ்நூல்களுக்கும், மற்றும் இதனையொத்த நூல்களுக்கும் உள்ள தொடர்புகள் என்ன என்ற பல்வேறு விஷயங்களை யூரிகிளாசோவ் திருமதி ஐஸ்மிர்ஞேவா ரபிஞேவிச் ஆகியோர் எழுதியுள்ள கட்டுரைகள் ஆராய்கின்றன.

சோவியத் நாட்டில் நடைபெற்றுவரும் திராவிடவியல், தமிழியல் ஆராய்ச்சியும் பணியும் வளர வளர, மிகைப்படுத்திக்கூற இயலாத சிறப்புமிக்க உண்மையான உலகப் பேரிலக்கியமான திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சியும் மேலும் விரிவடையும் என்பதில் ஐயமில்லை.

## நாட்டுப்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

போய்விடலாமா என்ற ஆசை பலருக்கு. என்ருலும் அந்த மண்ணைப் பற்றிய தப்பான செய்திகள் அச்சத்தை மூட்டின. அதனுல் சிலர் போவதற்குத் தயங்கிஞர்கள்.

'கண்டிகிண்டி என்னு
தேடா—மா
கண்டிக்கு நீ போகாதேடா
முத்து விற்கும்
கண்டியிலே மாமா
கண்டிக்கு நீ போகாதேடா
முன் பழக்கம் யாரு
மில்லே''

அந்த அச்சத்தை ஒரு பெண் புலப்படுத்துவதாக அமைகிறது இந்தப்பாடல் இன்னும்,

''கண்டி கிண்டி
என்காதிங்கோ
கண்டிப் பேச்சு
பேசாதிங்கோ
சாதிக்கெட்ட கண்டியிலே
சக்கிலியன்
கங்காணியாம்''

O O

''அட்டை இரத்தம்
குடிக்கிறதும்
அரிய பெருநடையும்
கட்டை இடறுதலும்—
அங்கே
காணலாமே கண்டியிலே''

என்றெல்லாம் எண்ணி மெய் சிலிர்த்தனர் 'அங்கே இருக்கின்ற சமூக அமைப்பு பற்றி எண்ணவும் அங்கு போக வேண்டிய நெடுந்தூரத்தையும், கரடுமுரடான காட்டு வழிகளையும் அட்டைக்கடியையும், நினைத்தும் மனம் மறுவினர் சிலரோ.

''கோப்பி பழமும்
கொய்யா பலா
மாம்பழமும்
காஞ்ச முகம் பூவும்
காணலாமே
கண்டியிலே''

என்று (குறிப்பு:- இந்த பாடல் வேருெரு சந்தர்ப்பத்தையும் கருத்தையும் குறிக்கும்) அந்த மண்ணின் வளத்தையும், அங்குள்ள செல்வச்செழிப்பையும் பேசி போவதற்கு அவாவுற்றனர்.

O O

வறுமையை யார்தான் வெல்லமுடியும். பிழைப்புக்கு ஒரு வழியைத் தேடி பலர் இலங்கைக்கு மாத்திரமல்ல; பர்மாவுக்கும் மலேயாவுக்கும், ஆபிரிக்காவிற்கும்கூட போகப் புறப்பட்டு விட்டார்கள்.

''மானத்திலே
மழையுமில்லே
மழைபொழிய காலமில்லே
கூடிமாடிப் பேசுங்கடி—
நாம
கொழும்பு சீமை
போய் பொழைப்போம்''

சொந்த மண்ணை நம்பிப் பிரயோசனமில்லை மழை பெய்யவோ வழியுமில்லை; அதனுல் பயிர் செழிக்கவோ பூமியில் வளமுமில்லை. இந்த வறுமையிலிருந்து மீட்சி பெற அந்நிய சீமைகளை நோக்கி போவதைத் தவிர வேறு வழியில்லை பலரும் அக்கரைக்கு போய் பிழைக்க முற்பட்டுவிட்டார்கள்.

''வீட்டைவிட்டுப்
போனதில்லே
வெளியூரக் கண்டதில்லே
பட்டி நெரஞ்சிருக்க
பக்குவமாயிருந்த காலம்
விட்டு மறைஞ்சதையோ
வீடெல்லாம் காடாச்சே
சிறு சம்பா பெருஞ்சம்பா
சிரகச் சம்பா வரகு
பெருஞ் சம்பா அவரை
துவரையெல்லாம்
அழிஞ்சி முடிஞ்சதினுல்
அரை வயிறு தண்ணி
இல்லே
தெய்வத்து சோதனையோ
தேசம்விட்டு
போவதற்கு''

—(வளரும்)

## வரலாறு ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இவர் பல மலைநாட்டுப் பாடல்களைத் தொகுத்து 'ஈழநாடு' முதலான பத்திரிகைகளில் எழுதியிருப்பதோடு அவற்றைத் துண்டுப் பிரசுரங்களாகவும் வெளியிட்டிருக்கிருர் — இவ்வாறு பலர் மலையகத்தில் செவி வழியாக வாய் மொழியாக வழக்கிலிருந்து வரும் பாடல்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதோடு பத்திரிகைகளில் பிரசுரித்து வருகிருர்.

ஃ

இந்த கட்டுரைத் தொடருக்குரிய பாடல்களை கிராமமாகத் தொகுத்து எழுதும் பொழுது பல சிரமங்கள் ஏற்பட்டன, மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களுடைய கதையை—வாழ்க்கையை தொழில் முறைகளை பிரச்சினைகளை வரலாற்று ரீதியில் அமைக்கும் பொழுது எந்தப் பகுதியை முன் எழுதி எந்தப் பகுதியைப் பின் எழுதுவது என்பதிலும், பல பாடல்களையும் எந்த சந்தர்ப்பத்தில் எழுதினுல் பொருத்தமாக விருக்கும் என்பதிலும் சில பாடல்கள் ஆண் கூற்ருகவும், பெண் கூற்ருகவும் அவை எந்த உணர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன என்று புரிந்துகொண்டு தொகுப்பதிலும் தடுமாற்ற முற்றேனென்றே சொல்ல வேண்டும். என்ருலும் முடிந்தவரை இக்கட்டுரைத் தொடரை திருப்திகரமாகவே செய்துள்ளேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

## தமிழ் தோற்றம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வே தவிர திராவிடம் பல நிலைகளில் உருமாறிய எந்த நிலையைப் பற்றியும் ஒன்றும் இல்லை. மதுரைப் பகுதியை அவர் ''செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி'' என்று குறிப்பிட்டிருக்கின்ருர்.

தமிழ் என்ற சொல் ஒரு தனித்தன்மை பெற்ற சொல்லாகும். தமிழிலுள்ள மெய் எழுத்துக்களை மூன்று பிரிவாகப் பிரித்துள்ளனர். வல்லினம், மெல்லினம் இடையினம் என்று. இந்த முறையிலே மூன்று இனத்திலும் மூன்று சொல்லும் அமைந்திருப்பதனைக் காணலாம். அதாவது வல்லினத்தைச் சேர்ந்த ''த'' வும், மெல்லினத்தைச் சேர்ந்த ''மி'' யும் இடையினத்தைச் சேர்ந்த ''ழ்'' ஓம் அமைந்திருப்பதனைக் காணலாம். அது மட்டுமல்ல இயல், இசை, நாடகம் இந்த மூன்றினையும் கொண்டதே தமிழ். இந்த மூன்றுக்குப் பொருத்தமானதாகவே மூன்றெழுத்தும் அமைந்துள்ளதைக் காணலாம்.

தமிழினை உணர்ந்தவர்கள் அதனை இனிமையானது என்று கூறுவார்கள். சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் பெண்ணைப் பற்றி வருணிக்கும் ஓர் இடத்தில் ''தமிழ் தழிஇய சாயலவர்'' என்று கூறுகின்ருர் இனிமை பொருந்திய சாயலையுடைய பெண்களே என்று தான் அதன் பொருள் கொள்ளக்கூடியதாகவுள்ளது. வேறும் சிலர் ''தமிழுக்கமிழ்தென்று பெயர்'' என்றும் கூறுகின்ருர்கள். இதில் முன்னுள்ள வல்லினத்தைக் கழித்து விட்டாலே (த்+அமிழ்) அமிழ் என்று வரக் கூடிய சிறப்பு மிக்க சொல்லாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

அதுமட்டுமல்ல தமிழர் சிறப்பாகப் போற்றியவைகளெல்லாம் மூன்றெழுத்தில் அமைந்திருப்பதனைக் காணலாம். காதல், வீரம், அன்பு, அறம், அறிவு, ஆண்மை, அரசு, பண்பு, நட்பு, மாண்பு, கல்வி, செல்வம், வாழ்வு, துறவு, அருள், இனிமை, தனிமை, சிவம், சக்தி, ஆகிய அனேகம் மூன்றெழுத்திலேயே அமைந்திருப்பதனைக் காணலாம். இவற்றைக்கொண்டு தமிழர்கள் மூன்றெழுத்துக்கு முக்கியம் கொடுத்தனர் என்பது நன்கு விளங்கும். ஆதலால் தமது மொழிக்கு மூன்றெழுத்துடைய பெயரை வைத்திருக்கலாம் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கின்றது.

அது மட்டுமல்ல மூன்ருவதாக அமைந்துள்ள ''ழ்'' தமிழுக்கே சிறப்புடைய சொல்லாகும். இச் சொல்லையும் சேர்த்து வைத்தது பண்டைத் தமிழரின் அறிவின் முதிர்ச்சியைக் காட்டுகின்றது. இவற்றினை நாம் இந்தியாது வேறு மொழியின் மருவல்தான் என்று ஆராய்வது சிறந்ததல்ல.

## தமிழ் வளர்த்த...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமைகளை உணர்ந்தவராகி, உலகத்தாருக்கும் உணர்த்த விரும்பி திருவாசகம் படைத்தார். அதனைப் படித்துப் பொருளறிய ஒரு பிறவி போதாதென்று கருதினுர் போப்; அதனுல், தம்மை 'தமிழ் மாணவர்' என்று சொல்லிக்கொண்டார், ஆம்; 90 ஆவது வயதை நெருங்கும் வரை தமிழ் பயின்றும் தமிழில் தாம் ஒரு 'மாணவர்' என்றே கருதினுர். அவரன்ருே தமிழ் மொழியின் ஆழத்தை அறிந்தவர்!

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், புராணங்கள், சாத்திரங்கள், தோத்திரப் பதிகங்கள் பிரபந்த வகைகள், தனிப் பாடல்கள் இவ்வளவையும் எழுபதாண்டு காலம் —முறையாகப் படித்துத் தமிழ் மொழியின் ஆழத்தை அறிந்தவர் சொல்லிக்கொள்ளுகிருர், தம்மை 'மாணவர்' என்று.

நந்தமிழ் மொழியின் பெருமைக்கு இதைவிடவும் சான்று வேண்டுமோ?

## தத்தை விடுதூது

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவகாமி! உன் மென்மையான இதயம் இதைத் தாங்கிக்கொள்ளாது என்பது தெரிந்தும் உன்னைத் திட்டிவிட்டேன். உன் மனம் நோகக்கூடாது. நீ மட்டும் என்னுடன் வாழச் சம்மதித்தால் இந்த உலகத்தில் வேறு எந்தத் துன்பமும் என்னை வாட்டாது. அவன் கண்கள் கலங்க வாய்விட்டுக் கதறுவதைக்கண்ட தம்பிமுத்துப் பிள்ளை அவ்விடத்தைவிட்டு மெதுவாக அகன்ருர்.

கனகசுந்தரமும் தம்பியின் துயரைப் பார்த்துச் சகிக்கமுடியாமல் வெளிப் பக்கஞ் சென்ருன். சரவணன் மட்டும் தனியாக அந்தப் படத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அப்போது அவன் உள்ளத்துத் துன்பமெல்லாம் கவிதையாக உருவெடுக்கிறது.

அந்தோ தவறுதவ றறியா
துரைத்தனன் யான்
பைந்தார்ப் பசுங்குழலாள்
பாவமறியாள் கிளியே
தந்தைதா யாரிலரேற்
றரியாளென் பாங்கருடன்
வந்தாள் மகிழ்ந்தாள்
வதிந்தாள் பசுங்கிளியே
வானுலகி லின்பமெலாம்
வந்தனவாற் பைங்கிளியே.

சிவகாமி மட்டும் சரவணனுக்குக் கிடைத்துவிட்டால் இந்த உலகத்தில் வேறு எதையுமே அவன் விரும்ப மாட்டான். உலகத்திலுள்ள சகல பொருட்களுக்கும் நிகராக அவன் சிவகாமியை நேசித்தான்; அதனுல் அவள் இல்லாமல் அவன் வாழ மாட்டான். வாழவும் முடியாது.

அதனுல் சிவகாமியின் உள்ளத்தை அவன் விருப்பத்தை அறிய அவன் துடிதுடித்தான். சிவகாமியின் வாயினுல் அவள் விருப்பத்தை அறிந்துகொண்டால் அவளை [illegible] லாம் என்பது அவன் நினைவு. ஆனல் அவன் எப்படிச் [illegible] திப்பது எங்கே சந்திப்பது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருந்தது. அவளைப் பொறுத்தவரை அவளிடம் செல்ல அவன் தயாராக இல்லை. இந்த நிலையில் அவனுக்கு வேறு வழி எதுவுமே புலப்படவில்லை.

அப்போது திடீர் என அவன் கண்கள் மரத்திற் பதிகின்றன. அன்ருெரு நாள் அவன் கண்ட அதே பைங்கிளி மரக்கொம்பரில் இருந்து அவனைப் பார்த்தபடியே இருந்தது. ஏன் இந்தப் பைங்கிளியைச் சிவகாமியிடந் தூதனுப்பக்கூடாது சிந்தித்துப் பார்க்கிருன். அது கவிதையாகவே பிறக்கிறது.

பெண்மணியை யான்
பெறுநாட்
பெற்றனளாற்
செல்வமெலாம்
மண்ணிதனுட் பிறிதொரீ
பொருள்
மதியேன் மதியேனுல்
ஒன்னுதறன் னுடனேயா
னேருயிர் ருடலாகி
மன்னுலகின் மகிழ்ச்சியுடன்
வாழ்வேன் பசுங்கிளியே
மங்கையவள் மனமறிந்து
வருவாய் பசுங்கிளியே.

## ''அமரர் அண்ணு பொன் மொழி''

உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள் வெட்டுக்கிளியைப் போல இங்குமங்கும் தாவுவர்; மரம் பழுத்தால் வெளவாலாவர்—புயலடிக்குமென்று தெரிந்தால் சந்துபொந்துகளைத் தேடிக்கொள்வர். கஷ்டநஷ்டம் வருமெனத் தெரிந்தால் காவடி தூக்குவர். உடனுக்குடன் கணக்குப் பார்த்துக் களிப்படைவர்.

—இரகு-ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# இப்பொழுது காட்சியளிக்கிறது

எல்பின்ஸ்டன் — ரொக்ஸி — றீகல்
(மருதானை) (வெள்ளவத்தை) (நீர்கொழும்பு)

ஜெமினி, விஜயகுமாரி, நாகேஷ், அசோகன், ராஜ்ஸ்ரீ,


—நடித்த—



# ம னை வி

2வது மாதம் **செல்லமகால்**

வின்சர் — இம்பீரியல்
(யாழ்நகர்) (மட்டுநகர்)




மாஸ்டர் பிரபாகர் திறம்பட நடித்த

# வாராஜாவா

---

# விரைவில் எதிர்பாருங்கள்



**கெப்பிட்டல்**

**பிளாஸா**

ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
அசோகன் முத்துராமன்
நாகேஷ் ஷீலா
நடித்த

ராமண்ணாவின்

டைரக்ஷன்:—ராமண்ணா

# மூன்றெழுத்து

**கிங்ஸ்லி**

சிவாஜி தேவிகா
—நடித்த—

## அன்னை இல்லம்

**கெப்பிட்டல்**

எம். ஜி. ஆர். ஜெயலலிதா
—நடித்த—

## கணவன்

**பிளாஸா**

எம். ஜி. ஆர். அஞ்சலிதேவி
—நடித்த—

## சர்வாதிகாரி

---

## 7வது ஜனத்திரள் நிறைந்த வாரமாக காட்சிதருகின்றான்

சென்ட்ரல்
(மருதானை)
ராணி
(யாழ்நகர்)
—ஆகிய திரைகளில்—

நடிகர்திலகம்
* சிவாஜிகணேசன்
* கே. ஆர். விஜயா
* முத்துராமன்

சிவாஜிகணேசன்
அளிக்கும்
அருண்பிரசாத் மூவீஸ்



சதன்
நம்பியார்
எஸ். என். லட்சுமி
விஜயசந்திரிகா
பேபிராணி
மற்றும் பலர் நடித்த

# ராமன் எத்தனை ராமனடி

கதை—வசனம்: பாலமுருகன்

இசை மெல்லிசை மன்னர்: எம். எஸ். விஸ்வநாதன்

டைரக்ஷன்—தயாரிப்பு: பி. மாதவன் (பி. ஏ.)

(பாஸ்கள்யாவும் ரத்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1971-ம் வருடம் வைகாசி மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர்: கோவைமகேசன்